Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


Pc Paradise
நியாயமான விலையில் தரமான கணனிகளையும் கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்
Pc Paradise
இல. 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)
TP No. 0777-271220

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 18 (23.12.2002) திங்கட்கிழமை இதழ் : 83

## பாராட்டத்தக்க வகையில் புலிகள் பேச்சுக்களில் கலந்துகொள்கின்றனர்!

### பிரிட்டனின் தூதுவர் இவான் ஸ்ரீபன்

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதால், பிரிட்டன் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்குவது குறித்துப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகப் பிரிட்டனின் இலங்கைக்கான தூதுவர் இவான் ஸ்ரீபன் தெரிவிததுள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே பிரிட்டனின் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வைபவத்தின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பிரிட்டன் தூதுவர் இவான் ஸ்ரீபன்,

சமாதானப் பேச்சுக்கள் முன்னேற்றகரமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. இப்பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் மிகவும் பாராட்டக்கூடியவகையில் செயற்பட்டுவருகின்றனர். இது வரவேற்கத்தக்க விடயம்.

புலிகள் இன்னமும் விட்டுக்கொடுப்புக்களைச்செய்து சமாதானப் பேச்சுக்கள் மேலும் வலுவடைவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். படைத் தளபதிகளை உடனடியாக இடமாற்றுக!

### பிரதமர் ரணிலிடம் மகேஸ்வரன் கோரிக்கை

(நமது நிருபர்)

அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களை இராணுவமும் கடற்படையும் கையகப்படுத்தியுள்ளன என்றும் இப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்காது தடுத்துவரும் யாழ். பிராந்திய இராணுவ, கடற்படைத் தளபதிகளை உடனடியாக இப்பகுதிகளிலிருந்து இடமாற்றுமாறும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இக்கடிதத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினால் மக்கள் படும் இன்னல்கள்பற்றி எடுத்து விளக்கப்பட்டிருப்பதோடு, இந்த விவகாரம் பற்றி ஆராய- பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவ, கடற்படைத் தளபதிகள், பிரதமரின் பிரதிநிதிகளாக மூன்று உயரதிகாரிகள் ஆகியோரை யாழ்ப்பாணத்திற்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# கீரிமலை, தனங்களப்பில் மீளக்குடியமர நிபந்தனைகளுடன் ராணுவம் அனுமதி!

- ஆட்லறித் தளங்கள் அகற்றப்பட வேண்டும்
- புலிகள் ஆயுதங்களுடன் வரக்கூடாது
- படையினர் நினைத்தால் சோதனை நடக்கும்

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும் - அதில், மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டவரைபில், கீரிமலை மற்றும் தனங்களப்பு - அரியாலைப் பகுதிகளிலும் நிபந்தனைகளின் அடிப்படையில் மக்களை மீளக்குடியமர்த்த அனுமதிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

கீரிமலை, தனங்களப்பு - அரியாலைப் பகுதிகளில் இருந்து படையினரை விலக்கி, அப்பகுதியில் பொதுமக்களை மீளக் குடியமர்த்துவதற்கு மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தனது திட்டவரைவில் சில நிபந்தனைகளையும் விதித்துள்ளார்.

இப்பகுதியில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது. புலிகள் இப்பகுதியில் ஆட்லறிகளையோ, மோட்டார் தளங்களையோ வைத்திருக்கக் கூடாது. இவற்றை அங்கிருந்து அகற்ற வேண்டும்.

இதேவேளை, இப்பகுதிகளில் (10ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுத் தொலைபேசிகள் நேற்று திடீரெனச் செயலிழப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவைகள் நேற்றுமுதல் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

ஏற்கனவே, கடந்தவாரம் முதல் சீர்கெட்டுப்போயிருந்த மேற்படி தொலைபேசிச் சேவைகள் நேற்று முதல் முற்றாகத் தடைப்பட்டன.

இதனால், யாழ். மாவட்டத் தொலைபேசிப் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குடாநாட்டுக்கான தொலைபேசிச் சேவைகள் இன்று வழமைநிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பிலுள்ள ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (200)

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, இடம்பெயர்ந்திருக்கிற பெருஞ்சனத்துக்கு பழைய கெதியேதான் போல...

### கூட்டமைப்புக்குழு இந்தியா செல்லும்!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. அனேகமாக ஜனவரி முதல் வாரத்தில் இக்குழுவினரின் இந்தியப் பயணம் இடம்பெறவுள்ளது. ஏற்கனவே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளார். (01)

## பலாலி – காங்கேசன் பாதை தவிர்த்தே எக்குடியேற்றமும் என்கிறார் ஒஸ்ரின்!

### 8 இடங்கள் பிரேரிக்கப்படலாமென ஊர்ஜிதமற்ற தகவல்

(கொழும்பு)

பலாலிப் படைத்தளத்துக்கான விநியோகப்பாதையான காங்கேசன்துறை வீதிக்கும் பலாலிக்கும் இடைப்பட்டபகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேயே மீள்குடியமர்வுப் பிரதேசம் அமைய வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டவரைபில், உயர் பாதுகாப்பு வலயங்க்ளில் உள்ளடக்கப்பட்ட எட்டுப் பிரதேசங்களில் மீள்குடியமர்வை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாக இன்னொரு ஊர்ஜிதமற்ற தகவல் தெரிவித்தது.

அரியாலை, கொழும்புத்துறை தனங்களப்பு, நாகர்கோவில், முகமாலை ஆகிய பிரதேசங்கள் உட்பட எட்டு இடங்கள் உள்ளடக்கப்படுவதாகவும் அத்தகவல் மேலும் தெரிவித்தது.

(01)

## ஜனவரி முதல் வாரத்தில் சந்திரிகா - ரணில் சந்திப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளது.

ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்கள் தொடர்பாக, இச்சந்திப்பின் போது - பிரதமர், ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்திப்பிற்கு முன்னோடியாக ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சந்திக்கவுள்ளனர்.

ஒஸ்லோ மாநாட்டின் பின்னர் ஏற்கனவே நடைபெறவிருந்த சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டிருந்ததது என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## இளந்தலைமுறையின் கல்வி, விளையாட்டு வாய்ப்புக்கள் போரினால் சீர்குலைந்தன!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

எமது இளைய தலைமுறையின் உடல், உள விருத்திக்கு உதவும் முகமாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை வட்டக்கச்சியில் உள்ள பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில், வடக்கு - கிழக்கு விளையாட்டுத்துறை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பகைமை பாராட்டும் நாடுகளையும் மைதானம் ஒன்றிணைத்து நிற்கின்றது. ஒலிம்பிக் மற்றும் உலகக் கிண்ணப்போட்டிகள் எல்லாம் சகல நாடுகளையும் இணைக்கும் களங்களாக அமைந்துள்ளன.

போர் எமது இளைய தலைமுறையின் வாழ்வைச் சீரழித்து, அவர்களுடைய கல்வி, விளையாட்டுத்துறை வாய்ப்புக்களைத் தின்றுள்ளது.

இளைய தலைமுறையின் வாழ்வையும் உடல், உள விருத்தியையும் மேம்படுத்தும் நோக்கில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். தமிழீழ விளையாட்டுத்துறையும் இதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரனும் கலந்துகொண்டார்.

# இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி; நல்லூர் விழாவில் வழங்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சினால் இந்து ஆலயங்களுக்குக் காசோலைகள் வழங்கும் நிகழ்வு நல்லூர் மணி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில், நேற்றுக்காலை 11 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில், நல்லை ஆதீன முதல்வர் ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி மகேஸ்வரக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். பின்னர் வசந்தா வைத்தியநாதன் வாழ்த்துரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தனதுரையில் - நான் அமைச்சுப் பதவியேற்று ஒரு வருடமாகின்ற இந்நேரத்தில் இப்படியான நிகழ்வு பொருத்தமானதொன்றாகும். எனது அமைச்சின்மூலம் இந்த ஒரு வருடகாலத்தில் இந்து சமயத்திற்கும் சமூகத்திற்கும் பல சேவைகள் ஆற்றியுள்ளேன். அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் மதமாற்றத் தடைச்சட்ட மூலத்தைக் கொண்டுவரவுள்ளேன். இந்து ஆலயங்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்க இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு தயாராக இருக்கின்றது. இந்துசமய ஆலய நிர்வாகத்தினர், ஆலயத்தைச சூழவுள்ள சமூகத்திற்கு பயன்படத்தக்க வகையில் பல சேவைகளைச் செய்ய முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

பின்னர் காசோலைகள் வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகியது. முதல் காசோலையை நல்லை ஆதீன முதல்வர், காயத்திரி காமகோடி சிவாச்சாரியாருக்கு வழங்கினார். தொடர்ந்து காசோலைகளை சர்வதேச இந்து குருமார் ஒன்றிய பீடாதிபதியும் அமைச்சர் தி.மகேஸ்வரனும் வழங்கினர்.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட கைத்தொழிற்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்லவும் கலந்து கொண்டார்.







இந்து கலாசார அமைச்சினால் கோயில்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கான காசோலைகளை அமைச்சர் மகேஸ்வரன் வழங்குவதை முதலிரு படங்களிலும், பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல - பேராசிரியர் சண்முகதாஸிற்கு தென்னங்கன்றினை வழங்குவதையும் மூன்றாவது படத்திலும் காணலாம்.

### உண்டியல் உடைக்க முனைந்தவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை ஞானவைரவர் உண்டியலை உடைத்துத் திருட முற்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை, வைத்தியசாலையின் உள்ளே அமைந்திருந்த ஞானவைரவர் ஆலயத்தின் உண்டியலை சில கருவிகளைக் கொண்டு உடைத்துக் கொண்டிருந்த ஒருவர், பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுமார் 35 வயது மதிக்கத்தக்க இந்நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

இவர் நேற்றையதினம் யாழ். நீதவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, மேற்படி நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ச)

### வரணியில் தமிழ்க் காங்கிரஸ் கிளை

(வரணி)

வரணியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிளையின் தலைவராக க.ஆறுமுகம் என்பவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# இந்திய அணியுடனான போட்டி: நியுசிலாந்து தொடரை வென்றது!

(ஹமில்டன்)

நியூசிலாந்துக்குச் சுற்றுலா சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் தோல்வியடைந்து தொடரை இழந்தது.

ஹமில்டனில்- நேற்று நான்காவது நாளில், இந்திய அணி நான்கு விக்கட்டுக்களால் தோல்விகண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி-முதலாவது இன்னிங்சில் 99 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்திருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 94 ஓட்டங்களுக்குள் சகல விக்கட்டுக்களையும் இழந்தது.



நியுசிலாந்து வீரர் அஸ்ரிலின் விக்கட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் பட்டேல்.

இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 154 ஓட்டங்களை எடுத்து, 160 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நியூசிலாந்துக்கு நிர்ணயித்தது.

நேற்றுக்காலை விக்கட் இழப்பின்றி 24 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து அணி, மதிய உணவு இடைவேளைக்கு முன்னதாக ஐந்து விக்கட்டுக்களை இழந்திருந்தது.

மதிய உணவுக்குப் பிந்திய ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வீரர்கள் நிதானமாக ஆடி 6 விக்கட் இழப்புக்கு 160 என்ற வெற்றி இலக்கை எட்டினர். இதன்மூலம் இந்திய அணியை நான்கு விக்கட்டுக்களால் நியூசிலாந்து வென்று, இரண்டு போட்டிகள் கொண்ட தொடரையும் வென்றது.



வெற்றி இலக்கை எட்டிய பூரிப்பில் நியுசிலாந்து வீரர்கள் ஹாட்டும் ஓறாமும்.

நியூசிலாந்தில் தங்கியுள்ள இந்திய அணி - 26 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள ஒரு நாள் போட்டித்தொடர் ஒன்றிலும் நியூசிலாந்து அணியுடன் விளையாடவுள்ளது.

## இன்றைய நாள் இனிய நாள்

**23-12-2002 -திங்கட்கிழமை**

**சித்திரபானு ஶ்ரீ, மார்கழி மீ, - 08ஆம் திகதி திங்கட்கிழமை**

| | |
|---|---|
| *திதி* | :- அபரபட்ச சதுர்த்தி - இரவு 11.08வரை அதன்மேல் பஞ்சமி. |
| *நட்சத்திரம்* | :- பூசம் - 7.47வரை, அதன்மேல் ஆயிலியம். |

| | |
|---|---|
| **மேடம்** | :- தேகசுகக் குறைவு, பணவரவில் சிக்கல், வைத்தியச் செலவு, வாகனத்தில் செலவு, கல்வியில் முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| **இடபம்** | :- தேகசுகம் நன்று, பணவரவு, காரியசித்தி, ஆடையாபரண பலன், மனமகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| **மிதுனம்** | :- தேகசுகக் குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, வாக்குவாதம், அயலவர்களுடன் மௌனம் சாதிப்பது நன்று, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம். |
| **கர்க்கடகம்** | :- தேகசுகம் நன்று, பணவரவு, உளப்பூரிப்பு, உறவினர் நண்பர்கள் வரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| **சிங்கம்** | :- மனக்கர்வம், வீண் அலைச்சல், தேவையற்ற செலவு, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| **கன்னி** | :- உளப்பூரிப்பு, தெய்வவழிபாடு, சமய அறிஞர் நல்லுறவு, செய்தொழில் லாபம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |

**யாழ். கொக்குவில இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்**

| | |
|---|---|
| **துலாம்** | :- சமூகசேவையில் மதிப்பு, மரியாதை, தொழிற்சிறப்பு, வெளியூர் பயணம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியபாரம் சமநிலை. |
| **விருச்சிகம்** | :- பிதா தேகசுகக்குறைவு, மனநலக்குறைவு, வைத்தியச் செலவு, தேவையற்ற பயம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| **தனு** | :- மனச்சஞ்சலம், புதிய தொழில் தொடங்குவது நன்றல்ல, தூரப்பிராயணம் தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |
| **மகரம்** | :- பெண்கள் உளப்பூரிப்பு, கௌரவம், உடல் குளிர்ந்த உணவு, உளம் குளிர்ந்த உடை அலங்காரம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| **கும்பம்** | :- பணவரவு, கடன் வரவு, காரியசித்தி, நோய்நீக்கம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை. |
| **மீனம்** | :- தேகசுகக்குறைவு, வைத்தியச்செலவு, புத்திரரால் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |

IEE COMPUTER DIVISION
121/1, அரசடி வீதி, கந்தர்மடம்.
ஆங்கிலம்
MR.K.RAMANATHASAN
கணிதம்
திரு.செந்தில்
தரம் 10/O/L
(வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்)

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்!
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்!
40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐ செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை, இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP
குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்) ஆஸ்பத்திரி (முன்) வீதி, யாழ்ப்பாணம்.
(சி-237)

அறிவித்தல்
புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளுதல்
19.12.2002 அன்று நடைபெற்ற பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை 23.12.2002- 25.12.2002 வரை காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
வெளிவாரி மாணவர் ஒன்றியம்,
புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(069)

நிறஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், தபு நடித்த
தாயின் மணிக்கொடி
25.12.2002 முதல
தென்காசிப்பட்டணம்
11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி/287)

ராஜா யாழ்ப்பாணம்.
எம்.ஜி.ஆர். அவர்களின் 15ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று முதல்
எம்.ஜி.ஆர்., ராதா சலூஜா நடித்த
இதயக்கனி
10.30, 2.30, 6.30
(சி-262)

# நோர்வே தூதுவரை நாடு கடத்துமாறு கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்!

## தேசிய பிக்குகள் முன்னணி ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கை நாட்டை விட்டு வெளியேற்றக்கோரி கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நோர்வே தூதரகத்துக்கு முன்பாக ஆரம்பமாகி, ஜனாதிபதி செயலகம் வரை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைத் தேசிய பிக்குகள் முன்னணி செய்துள்ளது.

நோர்வேத் தூதுவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். இவர், நாட்டின் இறைமையில் தலையீடு செய்கின்றார். அத்துடன், நோர்வேயின் தூதுவர் என்ற நிலையில் செயற்படாமல், புலிகளின் பிரதிநிதியாகவே நடந்து கொள்வதாகவும் வெஸ்ட்பேர்க் மீது தேசிய பிக்குகள முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம்- வெஸ்ட்பேர்க்கை நாடு கடத்துமாறு கோரும் மகஜர் ஒன்றையும் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஜே.வி.பியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ,

நோர்வே தூதுவரை நாடு கடத்த வேண்டும் என்றும், இதற்கான போராட்டங்களை நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளவிருப்பதாகவும் கூறியிருந்தது தெரிந்ததே.

## வவுனியா, மன்னார் மாவட்டங்களில் கையொப்பம் திரட்டும் படையினர்

(வவுனியா)

வவுனியா, மன்னார் மாவட்டங்களின் கிராமப் புறங்களில் உள்ள வீடுகளுக்குச் சென்று, படையினர் கையெழுத்துத் திரட்டி வருவதாகத் தெரிய வருகின்றது.

கடந்த ஒருவாரகாலமாகப் படையினர்- வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதி ஒன்றைக் கொடுத்துவிட்டு, சமாதானத்தை வலியுறுத்தி கையெழுத்துத் திரட்டுவதாக வெற்றுக் கடுதாசிகளில் இவை பெறப்படுகின்றன.

படையினரும் பொலிஸாரும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

படையினரும், பொலிஸாரும் வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெறுவதை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்படும் கையொப்பம் தவறான வழிகளில் உபயோகப்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்காவுக்கு தளம்

## முடிவு எடுக்க முன் அரசு எதிர்க்கட்சிகளுடன் பேசுக

### மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை

(கொழும்பு)



ஈராக் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா இலங்கையை ஒரு தளமாக பாவிப்பதற்கு ஏற்கனவே இரு நாடுகளிடையேயும் ஒப்பந்தம் இருப்பினும், இது குறித்து ஒரு முடிவு எடுக்குமுன் அரசு, சகல அரசியல கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு ஈராக் போரின்போது தளவசதி செய்து கொடுக்க இலங்கை தயாராக இருப்பதாக, கொழும்பில் அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்தது தொடர்பாக கருத்து வெளியிடும்போதே எதிர்க்கட்சித் தலைவர் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இலங்கை – அமெரிக்கா பாதுகாப்பு உடன்படிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவும் இலங்கையும் பாதுகாப்பு தொடர்பான உடன்பாட்டில் கைச்சாத்திடும் அளவிற்கு நெருங்கி வந்துள்ளதாக பி.பி.சி. தெரிவித்துள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமானால், இலங்கையில் அமெரிக்க விமானங்கள் மற்றும் கப்பல்கள் தரித்துச் செல்ல வசதிகளைச் செய்யும் வகையில் இவ்வுடன்பாடு எட்டப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸ் கருத்து வெளியிட்டபோது, ஜூலை மாதத்திற்குப் பின்னர் அமெரிக்காவும் இலங்கையும் நெருங்கி வந்துள்ளன. இதன் பின்னர்தான் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் முடிவை அமெரிக்கா எடுத்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்துவதில் அமெரிக்கா ஆர்வமாக இருப்பதாகவும் பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

## இலங்கை , தாய்லாந்துக்கு இடையில் நெடுஞ்சாலை அமைக்க ஆலோசனை!

### கொழும்பில் நடந்த கூட்டத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாலம் அமைத்து, அங்கிருந்து தாய்லாந்து வரை நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பதற்கு, இலங்கை அரசாங்கம் யோசனை கூறியுள்ளது.

பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து என்பன அங்கம் வகிக்கும் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு கொழுமபில் நடைபெற்ற போதே, இலங்கை இந்த யோசனையை முன்வைத்துள்ளது. இந்த யோசனைக்கு அங்கத்துவ நாடுகள் சாதகமாகப் பதிலளித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் 32 கிலோ மீற்றர் நீளமான பாலத்தை அமைப்பதற்கு 50 கோடி டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தை அமைப்பதினால் 90 ஆயிரம கி.மீற்றர் நீளமான நெடுஞ்சாலைகளுடன் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய வசதி ஏற்படும். எனவே, இந்த திட்டத்துக்கான முதலீடு பலன தரக்கூடியது என்று கூட்டத்தில் பங்கு பற்றிய வெளி நாட்டமைச்சர் ரிரோன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

மேற்படி ஐந்து நாடுகள் கலநது கொண்ட பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தை பிரதமர் ரணில் விககிரமசிங்க ஆரம்பித்து வைத்திருந்தார். இக்கூட்டத்தில் ஐந்து நாடுகளிலிருந்தும் அமைச்சர்கள் மட்டக்குழுக்கள் கலந்து கொண்டன.

அடுத்த கூட்டம் 2004 ஆம் ஆணடில் தாய்லாந்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### சனசமூக நிலைய நன்கொடை

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான இவ்வருட அரச நன்கொடை எதிர்வரும் 31ஆம் திகதி முதல் வழங்கப்படும்.

அன்றையதினம் சனசமூக நிலையத்தின் பொருளாளரை சமூகந்தந்து நன்கொடை நிதியைப் பெற்றுக் கொள்ளுமாறு நகரசபைச் செயலாளர் ந.சிவபாலதர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

(ச)

## வட - கிழக்குபுனரமைப்புக்கு ஜேர்மனி 285 மில். வழங்கும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கென- ஜேர்மனி அரசாங்கம் 285 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

ஜேர்மனியின் பொருளாதார அபிவிருத்திக்கான சமஷ்டி அமைச்சர் தானியா ரொடிகவ் சோர்பெக், இலங்கைக்கு வந்து நிலைமையை அவதானித்ததன் பின்னர்- இந்த நிதியுதவிக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சுவார்த்தைக்கான குழுவில் நால்வரைச் சேர்க்கக் கோரிக்கை

விடுதலைப்புலிகளுக்கும் அரசுககுமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில், தமது குழுவில் உள்ள நான்கு பேரைச் சேர்த்துக் கொள்ளும்படி, அமைச்சர் அதாவுல்லா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கோரிக்கை விடுததுள்ளார்.

ஏற்கனவே பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிவரும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது விசுவாசம் இல்லாதபடியால் இந்த நான்கு பேரை, புதிதாக இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் இணைத்துக் கொள்ளும்படியே அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை சுமுகமாகத் தீர்த்துககொள்ளுமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதாவுல்லா குழுவினருக்கு ஆலோசனை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.




திருகோணமலையில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யா/சங்கானை ஸ்தான அரசினர் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னராக - அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு - வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

### ஆண்டு நிறைவு விழா

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 17 வது ஆண்டு நிறைவு விழாவும், 15 வது சானறிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### மின் விளக்குப் பட்டங்கள்

(நவிண்டில்)

வடமராட்சிப் பகுதியில் இரவு வேளைகளில் ஒளிரும் மின் விளக்குப் பட்டங்கள் பலவர்ணங்களில் பறக்கவிடப்படுகின்றன. மிகவும் வசீகரமாக வடிவமைக்கப்பட்ட இம்மின்விளக்குப் பட்டங்கள், வயது வேறுபாடின்றி அனைத்து மக்களினதும் கவனத்தை ஈர்த்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (116)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(மல்லாகம்)

வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் - எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9.30 இற்கு பிரதேசசெயலர் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து வலி. வடக்கு விவசாயக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. (68)

### யூனியன் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு

(மல்லாகம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்காக - வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கிடப்பட்ட 1 லட்சம் ரூபாவை, வலி. வடக்கு பிரதேசசெயலகம் வலி. காமம் கல்வி வலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (68)

### விஞ்ஞான பீடத்தில் திருட்டு

(பன்னாலை)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் யன்னல், கதவுகளை உடைத்து உட்சென்ற திருடர்கள், மாணவர்களின் பொது அறையில் இருந்த டெக் மற்றும் விரிவுரையாளர்களின் பொது அறையில் இருந்த தொலைக்காட்சிப்பெட்டி ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் கடநத 20 ஆம் திகதி இரவு இடம் பெற்றுள்ளது. (72)

### ஒளி விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை மறுநாள் புதன்கிழமை மாலை 6 மணிக்கு கிறிஸ்மஸ் ஒளிவிழா நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பங்குத்தந்தை பயஸ் இருதயதாஸ் தலைமையில் இவ் விழா நடைபெறவிருக்கிறது. (ச)

### கொழும்புத்துறையில் வருடாந்த கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

கொழும்புத்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் 2003 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும், இன்று காலை 9.00 மணிக்கு உப்புக்குளம் பிள்ளையார் கோவில் முன்றலில் இடம் பெறவுள்ளது. (55)

# மீசாலையில் இராணுவத்தள விஸ்தரிப்பு வெளியேற வேண்டிய நிலையில் மக்கள்!

(சரசாலை)

அல்லாரை கிராம அலுவலர் பிரிவில் இருந்த 52 ஆவது பிரிகேட் இராணுவ முகாம், மீசாலை வடக்கில் உள்ள 53 ஆவது டிவிசன் முகாமுடன் இணைந்து விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியில் உள்ள மூன்று வீடுகள் இராணுவத் தளத்துக்குள் அகப்பட்டுள்ளன. அத்துடன் தளப்பகுதிக்குள் அடக்கப்பட்டிருக்கும் தென்னந்தோட்டங்கள் மற்றும் பயன்தரு மரங்களைப் படையினர் அழித்து வருகின்றனர்.

மேலும், புல்டோசர் மூலம் இப்பகுதியைப் படையினர் துப்பரவு செய்து வருகின்றனர். படையினர் தமது தளத்தை விஸ்தரித்துள்ளதால் - அப்பகுதியில் வசிக்கும் 25 குடும்பங்கள் அப்பகுதியிலிருந்து வெளியேற வேண்டியநிலை உருவாகியிருக்கின்றது.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திலும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

## வீட்டு வாசலில் மிதிவெடி குடும்பஸ்தர் காலிழப்பு!

(வடமராட்சி)

வீட்டு வாசலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் இளம் குடும்பஸ்தர் காலை இழந்தார்.

நேற்று துன்னாலை- தெற்கு வேம்படியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் வசந்தகுமார் (வயது 27) என்பவரே இடதுகால் பாதம்வரை இழந்தநிலையில் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

கடந்த வருடமும் இதே ஒழுங்கையில் புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடி வெடித்ததில் ஒருவர் காலை இழந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

## தங்க ஆபரணம் கண்டெடுப்பு

கே.கே.எஸ். வீதியில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## ரத்னசிறியைக் கண்டுபிடிப்பதற்கு உதவுமாறு மகிந்தவிடம் கோரிக்கை

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் இருப்பிடம் குறித்த விபரத்தைத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வுத் துறைப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

இறப்பர் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் பொலிஸாரே, மகிந்த ராஜபக்ஷவிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

முன்னாள் பிரதமரிடம் விசாரணைகளை நடத்த பொலிஸார் சென்றபோது, அவர் தலைமறைவாக உள்ளது தெரியவந்தது. இதேவேளை, இந்த மோசடி தொடர்பாக மூவர் ஏற்கனவே கைதாகித் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் பதவி, சம்பள உயர்வுகள் பாடசாலை மதிப்பீட்டின்படியே!

### அடுத்த வருடம் முதல் புதிய திட்டம்

ஆசிரியர்களது தகைமை மற்றும் அவர்களது திறன் குறித்து மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் அடுத்த வருடம் முதல் முழுமையாக அமுல்படுத்தப்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

சேவையிலுள்ள அசிரியர்களுக்கு பதவி உயர்வு மற்றும் சம்பள அதிகரிப்பு என்பன, எதிர்வரும் காலங்களில் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு அடிப்படையிலேயே வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களது பொதுக்கல் வித்தகைமை மற்றும் திறன் மதிப்பீடு இவ்வருடம் நடுப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என, ஏற்கனவே பிரகடனப் படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட, பரீட்சார்த்த அடிப்படையில் மாத்திரமே அது அமுல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும்- ஒரு பாடசாலையின் அதிபர், அவ்வதிபரால் நியமிக்கப்படும் அசிரியர் குழு- ஓர் ஆசிரியரை 104 அம்சங்களில் தவணைக்கு ஒரு தடவையாக, வருடத்திற்கு மூன்று தடவைகள் மதிப்பீடு செய்யுமெனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

## வட-கிழக்கு மாகாண இடமாற்றச் சபை

# ஊழியர் இடமாற்றத்தின்போது தன்னிச்சையாக செயற்படுகிறது!

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கீழ் உள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் அலுவலகப் பணியாளர் சேவையில் உள்ளோரை இடமாற்றம் செய்யும்போது, இடமாற்றச்சபை அகில இலங்கை அரசாங்க பொதுஊழியர் சங்கப் பிரதிநிதிகளின் ஆலோசனை பெறாது தன்னிச்சையாகச் செயற்படுவது குறித்து இச்சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அச்சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன், செயலாளர் க.நடராசா ஆகியோர் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரீ.ரங்கராஜாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2003 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அலுவலகப் பணியாளர்களுக்கான இடமாற்றம் குறித்த கூட்டம் அண்மையில் நடைபெற்றுள்ளது.

கடந்த காலங்களில் அலுவலகப் பணியாளர்களுக்கான இடமாற்றச்சபை கூடும்போது எமது தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் ஆலோசனை பெறப்பட்டு வந்தது எனவும்,

எமது தொழிற்சங்கத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர் எனவும், இவர்களின் நலனையிட்டு ஆலோசனை நடத்தாமல் செயற்படுவது விரும்பத்தக்கதல்ல. எனவே, எமது பணியாளர்களை இடமாற்றம் செய்யும், இடமாற்றச் சபைக்கூட்டம் நடைபெறும்போது எமக்கு அழைப்பு விடுத்து ஆலோசனை பெறப்பட வேண்டுமெனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (100)

# புலிகளின் விண்ணப்பத்தை அரசு சமர்ப்பிக்க வேண்டும்

### சரத் அமுனுகம கோருகின்றார்

புலிகள் தமது வானொலிச் சேவையை ஆரம்பிக்க, அரசிடம் எழுத்து மூலமாகச் சமர்ப்பித்த விண்ணப்பத்தை வெளியிடுமாறு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பேச்சாளர் சரத் அமுனுகம, எமக்குத் தெரிந்த அளவில் இத்தகைய எந்த விண்ணப்பத்தையும் புலிகள் அரசிடம் சமர்ப்பிக்கவில்லை. சட்டப்படி இத்தகைய எழுத்துமூல விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். இது சட்டத்தை மீறும் செயல் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கோப்பாய் வீதியில் சந்தை போக்குவரத்துக்கு நெருக்கடி

கோப்பாய்ப் பகுதியில் பொதுச் சந்தை அமைக்கப்பட்டுள்ள போதும், உரும்பிராய் -கோப்பாய் வீதியில் வைத்து மீன், மரக்கறி வியாபாரம் நடைபெறுவதால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பெருமளவிலான வாகனங்கள் கோப்பாய் - உரும்பிராய் பாதையூடாகவே பயணத்தை மேற்கொள்கின்றன. இதனால் இப்பகுதியில் விபத்துக்கள் பெருமளவில் ஏற்படவாய்ப்புக்களுள்ளன.(84)

## மெலிஞ்சிமுனை மீனவர்களிடம் இரவில் பாஸ் கேட்கும் கடற்படை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைப் பகுதியில் தினமும் இரவு வேளையில் ரோந்துப்பணியில் ஈடுபடும் கடற்படையினர் - அப்பகுதியில் உள்ள மீனவர்கள் கடற்படையினரின் பாஸ் எடுத்துச் செல்ல வேண்டும் என நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் இரவு 10 மணி தொடக்கம் காலை 5 மணிவரை கடற்படையினர் காவலுக்கு நிற்பதால், மக்கள் இரவில் நடமாட அச்சமடைந்துள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு கடல் வலயச் சட்டம் ஓரளவு நீக்கப்பட்டும் கூட -கடற்படையினர் இப்படியான செயல்களில் ஈடுபட்டு வருவதுடன், மீனவர் அடையாள அட்டை இருந்தும் பாஸ் இல்லாவிட்டால் கடலுக்குச் செல்ல அனுமதிமறுத்தும் வருகின்றனர். இதனால், பாஸ் பெறுவதற்காக வேலணை கடற்படை அதிகாரி அலுவல்கத்திற்கு மீனவர்கள் சென்று வரவேண்டி''புள்ளது.

(51)

## இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தினால் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உணவுப் பொருட் பொதிகளை வழங்கியுள்ளது.

1990 ஆம் ஆண்டு உப்புவெளியில் இருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியேறியிருந்த 59 முஸ்லிம் குடும்பங்கள் திருமலை லவ் லேன் பகுதியில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கியுள்ளது. (59)

# வேகமாகப் பரவிவரும் காய்ச்சல்; வைத்தியசாலைகளில் இட நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பரவிவரும் இனந்தெரியாத காய்ச்சலினால் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதனால் வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கான நோயாளிகள் விடுதிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதுடன், மேலும் பெருமளவிலானோர் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குடாநாட்டில் தொடர்ச்சியாக பெய்த மழையை அடுத்து, குடாநாட்டில் பரவலாகக் காய்ச்சல் பரவ ஆரம்பித்தது. கடந்த ஒருமாதமாக பரவிவரும் காய்ச்சலினால் குடாநாட்டு வைத்தியசாலைகளில் பெருமளவான நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை, ஆய்வுகூட வசதிகள் இல்லாமையால் அங்கு சிகிச்சைக்காக வருவோர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

இதனால் யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால், கட்டில்கள் இன்றி இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பாய், படுக்கை விரிப்புக்களைப் பாவித்து நடைபாதையின் இரு பகுதிகளிலும் நோயாளர்கள் படுக்க வைக்கப்பட்டுள்ளனர்.

## ராணுவ அணையால் கடலுக்குள் செல்லாது தேங்கும் வெள்ளம்

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் இரண்டாயிரம் குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தால் அமைக்கப்பட்ட மண் அணைகள் காரணமாக, கடலுக்குள் வெள்ளம் செல்ல முடியாமையினாலேயே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமைக்கான காரணம் எனத் தெரியவருகின்றது. (17)



உமையாள்புரம் பகுதியில் வெள்ளத்தால் சேதமடைந்த ஏ-9 வீதி, தற்காலிகமாகச் செப்பனிடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்காலிகமாகச் செப்பனிடப்பட்ட வீதி மற்றும் மதகினைப் படங்களில் காணலாம்.

# A-9 என நீளும் நினைவுகள்

**பகுதி பதினொன்று**

கரிய பாம்பென நீண்டு கிடந்திட்ட
கண்டி வீதியோர்.... 'காவிய நாயகன்'
வரிசையில் சேர்ந்ததிந்தப் பொழுதிலே!
மலர்ந்த தொண்ணூறாம் ஆண்டின் நடுவிலே!!
சிறுதுளிச் சமர் தமிழரின் தாயகத்
திசைகளெங்கணும் வெள்ளப் பெருக்காச்சு!
நரியினூளையும் ஆந்தை அலறலும்
நம்மடிதனைச் சுடலையாய் மாற்றிற்று.

வடசெவிதனைப் பீரங்கி வேட்டுகள்
வாட்டத் தொடங்கின; வரிசை வரிசையாய்
அடி விழுந்தது ஒவ்வோர் இடத்திலும்!
அன்றொரு தினம்.... 'செம்மனச் செல்விக்காய்'
அடிகள் ஏற்றுச் சிவனார் கிடக்கையில்
அனைத்துயிர்களும் அடிபட்ட மாதிரி
வெடி ஒலி ஒரு திக்கில் முழங்கிட
வேதனை முழு மக்களைப் பற்றிற்று.



வடதிசை 'வளி' குண்டாற் கிழிபட
வானில் எந்திர வல்லூறு கூவிட
உடனடி விளைவாய் ஆனை இறவின்
ஒருவழிப்பாதை தானாக மூடிற்று.
வடக்கு நோக்கியே வந்த 'லொறி'.... பல
உப்பளப் பக்கம் முக்தி அடைந்தன.
'வடக்கு வாசல்' வவுனியாவில்.... 'கிளித்-
தட்டு' மறித்தலாய் கெடுபிடி சூழ்ந்தது.

ஜெயங்கொண்டான்

# ந. சத்தியபாலனின் இரு கவிதைகள்

## காற்றோடு கலப்போம்

*உள்ளெரியும்*
*பெருந்தீ...*
*உனக்கும்*
*எனக்கும்*
*பொது!*

*நீ தனி...!*
*நானும் தனி!*

*எரிதல்*
*இருவர்க்கும்*
*பொது*

*தணிக்க வேண்டிய*
*நீ தனி!*
*நானும் தனி!*

*தாகத்தில்*
*வரண்டு*
*தீயினில்*
*எரிந்து*
*பொசுங்கி*
*நீறாவோம்...!*

*உனதும்*
*எனதும்*
*சாம்பல்*
*காற்றுக்குப்*
*பொது!*

*காற்றள்ளிப்*
*போகட்டும்*
*உன்னையுமென்னையும்*
*ஒன்றாய்!*

## தரிசனம்

திடுமென ஒருநாள்...
இனிப்புப் பூச்சுக்கள்
கரைந்து போயின...
உள்வீடு
நாவைத்தொட்டு
தன்மெய்ச்சுவை சொல்லிற்று
எழுந்த... குமட்டலில்
எதிரே
நிஜத்தின் குரூரமுகம்!
பழைய பசுங்கனவு
சோப்பு நுரைக்குமிழியாய்...
காற்றில்
மெல்ல
மிதந்து... போயிற்று!






# உலக இலக்கிய அரங்கில்..

## பத்திரிகை உருவாக்கிய விஞ்ஞானி

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம், 'தினமணி' பத்திரிகையைப் படித்ததினால்தான் ஒரு விஞ்ஞானியாக வர முடிந்தது என்று ஒரு கூட்டத்தில் சூசகமாகத் தெரிவித்தார்.

இவர் பத்து வயது பையனாக இருந்தபோது இது நடந்தது. தனுஷ்கோடி என்ற கிராமம். இப்பொழுது இக்கிராமம் கடலில் மூழ்கி விட்டது. அந்தச்சின்ன ஊருக்கு வரும் பத்திரிகை தினமணி. இந்த தினமணியை ரெயிலில் எடுத்து வந்து ஊரில் உள்ள சந்தாதாரர்களுக்கு விநியோகிப்பதுதான் அப்துல் கலாமின் வேலை.

இந்தப்பத்திரிகைகளை விநியோகிக்க முன், தான் முற்றிலுமாக வாசித்து விடுவாராம். அப்போது இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்த காலம். ஒருநாள் பத்திரிகையைப் புரட்டும்போது சின்ன விசயம் அவர் கண்ணில் பட்டது. அதுதான் நேசநாடுகள் தயாரித்த குண்டு போடும் விமானம். எப்படிக்குண்டு போடுகிறது. அந்த விமானத்தில் விசேட சக்திகள் என்ன என்பது பற்றி தினமணி விமர்சித்திருந்தது.

அதைப்படித்த அப்துல் கலாமுக்கு அது போன்ற விமானங்கள் தயாரிக்க வேண்டும், எதிரியைத் தாக்க வேண்டும் என எண்ணம் பிறந்தது.

அவர் பல வருடம் கழித்து வெற்றிகள் ஈட்டினார். ஒரு பத்திரிகை ஒன்று எப்படி இளைஞர்களை ஊக்குவிக்க முடியும் என அப்துல் கலாம் பத்திரிகைக்கூட்டமொன்றில் எடுத்துரைத்தார்.

## தற்கொலையும் எழுத்தாளர்களும்

எழுத்தாளர்களும் கலைஞர்களுமாகிய விளாடிமிர், மாயாகோவ்ஸ்க்கி, ஜக்சன் போலக், மிஷிமா, எர்னஸ்ட் ஹெமிங்கோ போன்றவர்கள் தற்கொலை செய்தவர்களாவர்கள். இவர்கள் தற்கொலை செய்ததற்கான காரணங்கள் இதுவரை தெரியவில்லை.

ஆனால் 1897ல் எமிலி துர்ஹைம் என்ற சமூகவியலாளர் தற்கொலை பற்றி எழுதிய புத்தகமே இன்றுவரை அதிகார பூர்வமாக இருக்கிறது.

சமூகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டு, தனித்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற உணர்வும் பெரும்பான்மைத் தற்கொலைக்குக் காரணங்களில் ஒன்றென எமிலி துர்ஹைம் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதானோ இந்த எழுத்தாளர்களின் தற்கொலைகளுக்கு காரணமோ? யாரறிவார்.

தொகுப்பு - மணிசேகரன்

# பாடுபொருள் புதிதாக இருப்பதே புதுக்கவிதை

**விக்கிரமாதித்தியன்** - தமிழ் உலகம் பேர் சொல்லவல்ல ஒரு கவிஞன். வாழ்க்கையை இயல்பு மாறாமல் நுண்ணியதாய்ப் பார்ப்பவர். சர்ச்சைக்குள்ளானாலும் இவரது படைப்புக்கள் சாமான்யமானவையல்ல.

புதுக்கவிதை பற்றி கவிஞர் திருமேனியின் கவிதைகளூடு அவரது பார்வை இதோ..

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

ஆதலினால் வெளியே தெரியாது, விளம்பரமாகாது இருககிறார். தொகுப்பாக வரவேண்டிய கவிதைகள். தமிழ்ச் சூழல் அவ்வளவு சுலபத்தில் வரவிட்டு விடுமா என்ன, வந்தாக்கால் இந்தக் கவிதைகளின் அருமை தெரியவரும்.



விக்கிரமாதித்தியன்

திருமேனியை எப்படி அறிமுகப் படுத்துவது. பள்ளிப் படிப்பு முடித்ததும் சென்னைக்குப் புறப்பட்டு வந்து விட்டவர். காரணம் சினிமா. எதிர்கால இயக்குநர். 'நீ பாதி நான் பாதி', 'அன்னை வயல்' படங்களில் உதவி இயக்குநர். அதற்கு முன்பு ஒரு பத்திரிகையில் துணையாசிரியர். கண் பார்த்ததைக் கை செய்யும் திறமைசாலி. சிறுகதைகள் எழுதியிருக்கிறார். இந்தச் சின்ன வயதிலேயே ஒரு கவிதை புஸ்தகத்துக்கு முன்னுரை தந்திருக்கிறார். கட்டுடைக்காமலேயே பிரம்மராஜன் கவிதைகளையும் புரிந்து கொள்ளக்கூடிய கற்பூர புத்தியுள்ளவர். தீர்க்கமான ரசனையுடையவர். தென்காசிக்காரர். இப்போது சென்னைவாசி. இனிமேல் சினிமாக்காரர்தான்.

"க்ளினிக் வாசலில்
கடைசியைக் காக்கா
கொத்தக் கொத்த அண்
ணாந்து
சாகக் கிடந்த அந்தக்
கழுதை
கயிறு கட்டி அவன்
ஆத்துக்கு
இழுத்துப் போகையில்
கண்ணுருட்டிய பரிதவிப்பை."

தெருவீதி. அதையொட்டிய கிளினிக். வாசலில் சாகக் கிடக்கும் கழுதை. சாலையில் போகிற வருகிற கார், லொறி ஏதாவது அடித்துப் போட்டுவிட்டுப் போயிருக்கக் கூடும். மின்சாரம் தாக்கித் தூக்கியெறியப்பட்டிருக்கலாம்? இயற்கையாகவே கூட சீக்குப் பிடித்து இப்படியாகி இருக்கலாம்? எப்படியோ இந்தக் கதிக்கு ஆளாகி விட்டது. வெங்கொடுமைக்குள்ளாகி சாவின் விளிம்பில் நிற்கிறது. இனி, காப்பாற்ற முடியாது. மரணம் நிச்சயம். விதி முடியப் போகிறது.

அதன் கடைசித் தருணம். மரணம் எதிரே வந்து நிற்பது தெரிய உயிர் பிரிவது பரிதாபமானது. எந்த ஜீவனுக்கும் நேரக் கூடாதது. அது நிம்மதியான சாவில்லை. கலவரப்படுத்துவது. அப்படியொரு கஷ்டத்தில் அந்தக் கழுதை. கடைசியைக் காக்கா கொத்தக் கொத்தச் சரிந்து கிடக்கிறது, எதுவும் செய்யக் கழியாமல் அண்ணாந்தபடி.

அவன் -

உடையத்துக்காரனான சலவைத் தொழிலாளியாக இருக்கலாமோ. நகரசுத்தித் தொழிலாளி? Dispose பண்ண வேண்டியவனாக இருக்கிறான்.

கயிற்றில் கட்டி ஆற்றுக்கு இழுத்துக் கொண்டு போகிறான். வேதனையில் சேரும் வேதனை. மரணத்தை விடவும் பயங்கரமான வலி, கத்தக்கூட ஆவியில்லை. கண்ணுருட்டி பரிதவிக்கிறது. அந்த உயிரின் அவலம் கண்ணில்படுகிறது. போகிற வழியிலோ, வருகிற வழியிலோ பட்டது மனசைப் படுத்துகிறது. யாரையுமே கஷ்டப் படுத்தத்தான் செய்யும், நெஞ்சில் வலி உண்டு பண்ணிவிடும். பாவமாக இருக்கும். ஆனால் என்ன செய்ய முடியும். யாருடைய சாவின் வேதனையையும் யாரும் ஒன்றும் பண்ண முடியாது. நெகிழ்ந்து போய் நிற்கலாம். பரிதாபப்படலாம். வேறென்ன செய்ய முடியும்.

"எழுதவும்" இந்த பாதிப்பை எழுத வேண்டும்போல இருக்கிறது கவிஞருக்கு. எழுதி ஆற்றிக் கொள்ள வேண்டும்போல இருக்கிறது. சராசரி மனுஷன் யாரிடமாவது சொல்லித் தீர்ப்பான். எழுத்தறிந்தவன் எழுத நினைக்கிறான். எழுதாமல் தீராது என்றிருக்கும், எழுதுவது நல்லது. எழுதத்தான் வேண்டும். தோன்றும் போதே எழுதினால் சரியாக இருக்கும்.

"க்ளினிக் வராண்டாவில் எல்லை குறித்த சிந்தையைத் தூண்டி தொப்புள் மறைத்துச் சொருகிய அந்தப் பேனாவைத் தொட்டு எடுக்கத் தருவாளா அந்த நர்ஸ்".

எழுத முதலில் தாள் வேண்டும். அருகில் இருக்கும் ஏதாவதொரு பெட்டிக்கடையில் சிகரெட் அட்டை கேட்டு வாங்கிக் கொள்ளலாம். அது பெரிய காரியமில்லை. பேனா? அதுக்காக அங்கே இங்கே போய் அலைய வேண்டாம். கண்ணுக்கு எதிரிலேயே இருக்கிறது. ஆனால்? க்ளினிக் வராண்டாவில் எல்லை குறித்த சிந்தையைத் தூண்டித் தொப்புள் மறைத்துச் செருகிய அதை எடுக்கத் தருவாளா அந்த நர்ஸ்.

அந்தப்பேனா. அந்த நர்ஸ். நடக்கிற காரியமா இது? பேராசை, கனவு, நினைப்பு.

ஆதி சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் நடுவே இப்படியொரு பிளவு இல்லை. விகற்பம் இல்லாமல் இருந்தது. நிஷ்களங்கம் விளங்கி வந்தது. எந்தத் திரையும் கிடையாது.

*(அடுத்தவாரம் தொடரும்)*

# உதிர...

## சிறுகதை

**தலித் சிறுகதைகள்** - தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்டு வதைக்கப்படும் தலித் மக்களின் உள்ளக்குமுறல்களை, அவர்தம் வாழ்க்கையை உள்ளதை உள்ளபடி சொல்வன.

**அழகிய பெரியவன்** - இந்த வகையில் அற்புதமான சிருஷ்டிகர்த்தா. வயதில் இளையவராயிருந்தாலும் படைப்புத் திறனில் பெயர் சொல்லக்கூடிய அவரது படைப்பில் இதுவும் ஒன்று.

### அழகிய பெரியவன்

காக்காசி நாறினான். காரை உதிர்ந்த மண்சுவரில் மூட்டைப்பூச்சிகளின் இரத்தம் பிதுக்கப்பட்ட கருஞ்சிவப்புத் திட்டுக்களின் இடையில் காக்காசி பிணையப்பட்டிருந்தான். கன்னங்கள் டொக்கு விழ ஆழமாகப் பீடியை இழுத்தான் அவன். வறண்டு எலும்புகள் தேலிய மார்பிலிருந்து புகைப் பொதிகள் விடாய்த்து வெளியேறின. இருமல் பீறிட்டது. மார்புக் கூடு பிளந்து விரியும்படியாக அவனை ஊடறுத்தது இருமல்.

செமித்த சாராய நாற்றமுடன் பீடியின் கடும் நாற்றமும் சேர்ந்து மேலும் நாறினான் காக்காசி. மல நாற்றம், செத்த உடல்களின் நாள்பட்ட நாற்றம் என நாற்றக் கலவை காற்றிலே இமிரி, அப்பன் முன்னிருக்கும் பாமாண்டியின் நாசித துவாரங்களில் முண்டியடித்தது. நுரையீரல் நிரம்பி உடல் நெளிந்தது. குமட்டிக் கொண்டு வந்தது அவனுக்கு.

தளர வெளிக்கிருக்கும் அவகாசத்தையும் பள்ளி பறித்துக் கொளவது பாமாண்டிக்கு வருத்தமளிப்பதாய் இருக்கும், முன்பெல்லாம், வகுப்பறையில் நாற்றம் புலன் பற்றியதும், பையன்களெல்லாம் முகம் சுழித்து, உவ்வே கொட்டி, வண்ணாத்திப் பூச்சிகளின் றெக்கைகளை அழுத்துவது போல் மூக்கைப் பிடித்துக் கொள்வான். கீஸ் கீஸ் என்று மூக்கடியில் தேய்த்துத் தவிப்பான். உடம்பெங்கும் ..... களாய் ஆக்கப்பட்டு விட்டவர்களைப்போல தெரிவார்கள் அப்போது அவனுக்கு எல்லாரும்.

"பொணந்தின்னிங்க..."

மூக்கடைத்த கீச்சுக்குரலில் வசவுகளைச் சொல்வான் பாமாண்டி.

பள்ளிக்குப் போகையிலும் வருகையிலும் மலக்குப் பல்களால் வரிசைக்கட்டிய தெரு கடக்க மூக்குப் பிடித்தே மீள்வான். செத்து உப்பிப் புழுத்திருக்கும் நாய் வீச்சம் வழியில் எங்கேனும் அணைந்தால் 'கிசிரு அடிக்கும்' என ஓடும் அவன் கால்கள். கூட்டாளிகள் கெட்டவார்த்தை பேசினால் அருவருத்து மாய்வான். பக்ரீத் காலமொன்றில் மழை பிடித்துக் கொணடபோது வீட்டில் காயப்போடப்பட்டிருந்த கறித் தோரணங்கள் அழுகத் தொடங்கிவிட்டன. அவனைப் பார்க்க கூட்டாளி ஒருவன் வர நேர்ந்து விட்டது. அப்போது, அவமானத்தால் துவண்டுப் போனான பாமாண்டி. அதைத் தொடர்ந்து கறிக்கவிச்சி பிடிக்காமல் சைவனாய் மாறிப் பின் அரை மனத்துடன் மீண்டதும் உண்டு. வெளிக்கிருக்காத ஒரு மனிதனாக தான் மாறிவிட வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டுதல் செய்து கொண்டுமிருக்கிறான் சில சமயங்களில்.

அவனை நெட்டிமுறிக்க முயன்ற போதெல்லாம் ஒரு புழுவாய் மாறியிருக்கிறாள் பாட்டி அவனுக்கு.

"நா உம் பீ வாராமெ, ரா உஞ்சளி சிந்தாரமெ வளர்ந்துட்யாடா நீ பாமாண்டி?"

"அவனுக்குக் கற்பூரம் கவிச்சி அடிக்குதும்மா..."

இப்படி நீத்தம் பாக்குறவன் வேற எங்காச்சும் போயீ பொறந்து தொலைக்க வேண்டியதுதான்"

செவந்தமணியும், பாட்டியும் தங்களின் நியாயநிறுவலில் - மேலும் புழுவாய் மாறியிருக்கின்றனர் அவன் முன்.

ஞாபகங்களில் தங்கும் அத்தனை நாற்றப் படிவுகளும் பொடியாகி உதிர்ந்து நாற்றப் புகைச் சுருள்களால் இன்று அப்பன் காக்காசி முன் அமர்ந்திருந்தபோது எழும்பி வந்து உலுப்பின. உப்பிப் பெருத்து சுவர் சார்த்தி இருத்தப்பட்ட பிணமென அப்பன் பாமாண்டிக்கு காட்சியளித்தான். அப்பன் பிணமென நினைவுகள் ஊடாடியதும், உலுப்பிய கிளையென அதிர்நதான் அவன். பாமாண்டியின் நினைவு கண்ணிகள் விடுவித்த வெண்நினைவுகள் முன்னெழுந்த கிளைத்தன. இதனால் காக்காசி பிணமாய்த்தான் சமைந்து போயிருக்கக்கூடும் என பாமாண்டி உறுதியாய் நம்பத் தலைப்பட்டான்.

ஒரு காற்றடி காலத்தில்தான் காக்காசி கிணறுகளைத் தோண்டிக் கொண்டிருந்த வேலையை விட்டுத் தோல் ஷாப்புக்குப் போனது. மண்ணின் சதைத்துண்டுகளை அகழ்ந்து அகழ்ந்து தண்ணீர் சுழிக்கும் நாளங்களை தேடிக் கொண்டிருந்ததை செவந்தமணி தடுத்து விட்டாள். பிணம் வசிக்க வீடு தோண்டும் வெட்டியானைப் போல் தினமும் காக்காசி மண் கோலி, மண்கோலி பாதாளங்களின் உட்பிரவேசித்து பிணமென மீள்வது செவந்தமணியை அவஸ்தையுறச் செய்தது. சடலத்தின் குளிர்ச்சி நிரந்தரமாய் கணவனின் உடம்பில் தங்கிவிட்ட தாய் உணர்ந்த ராத்திரியில் அவனை தோல் ஷாப்புக்கு போகும்படி ஏவினாள். அங்கும் பிராணிகளின் உடல் நழுவிய தோல்களுடன் காக்காசி இருக்க நேர்ந்தது. நாற்றமும் சவமும் பிணைந்த வாழ்வின் சோகைத் தனத்தில் தோல்களை உயிர்ப்பிக்கும் பணியின் தூக்கம் அவனை அந்த வேளையில் ஈடுபட வைத்தது.

வேலைக்குப் போயிருந்த முதல் வாரத்தின் கடைசிநாள் மாலையில இன்னும் வீடு மீளாதிருந்தான் காக்காசி. சூரியனின் துர்மரணத்துக்குப் பின் வளர்ந்த இருட்டில், பிள்ளையுடன் வாசல் காத்துக்கிடந்தாள் செவந்தமணி. நேரம் ஏற ஏற, யாருமற்றத் தனிமையின் இரவில் அனாதையின் சோகம்போல் பொழுது மாறிச் சூழ்ந்தது அவர்களை. பாமாண்டி செவந்தமணியின் முகத்தை ஏறிட்டான்.

பரிவின் கசிவு ததும்பும் விழிகள் கன்னத்தின் உள்வாங்கிய குழிகளில் சுழன்றன அவள் முகத்தில். "ஏம்மா உன்னும் அப்பா வர்ல?"

" தெரியிலேயே சாமி இப்ப வந்துனு இருப்பாரு"

-அவளின் சொற்கள் ஆதரவற்று தவித்தன. பாமாண்டிக்கு நம்பிக்கையின் சாரம்வற்றி சுயமனத் தேற்றலின் எண்ணங்கள் குழம்பின.

"ஒருவேளை அப்பா செத்துட்டிருப்பாரோ"

பாமாண்டியின் முதுகு அதிர்ந்தது. செவந்தமணியின் அடிகளைத் தாங்காமல் காக்காசி வந்து தேற்றும்வரை அழுது சுணங்கிக் கொண்டிருந்தான். பலகாரங்கள் பொதியப்பட்ட பொட்டலத்தை மகன கைகளில் திணித்துவிட்டு தின்னச் சொல்லி பார்த்துக் கொண்டிருந்தான் காக்காசி. அப்போதுதான் அதுவரை அறியப்பட்டு வந்த அப்பனின் மனித வாசனையுடன் புதிதாய் குடலைப் புரட்டும் நாற்றம் ஒன்றும் வெளிப்படுவதை நுகர முடிந்தது பாமாண்டியால்.

நாற்றங்களைப் பிரித்தறியும் வயது துவங்கிய போது தான் பாமாண்டி குருகுலவாசம் கற்கும் வேதியப்பொடியன் கணக்காய் வெளியூர்களின் பள்ளிவிடுதியில் கல்வியைக் கழிக்க நேர்ந்தது. நாற்ற உலகிலிருந்து நந்தவனப் பரப்புக்கு உட்பட்டுவிட்டதாய் நினைக்கத் தலைப்பட்ட அவன் வீடு மீள் தலை அருவருத்தான். மலங்கழிப்பதின் அசூயையுடன் கல்லூரிக் காலங்களில் தான் பாமாண்டி எனும தன் பெயரை சுக்கல் ஆக்கி கா.பாமாண்டி என புனைந்து கொண்டதும் நடந்தேறின. மாமன்னன் அக்பர் உடலிருந்தும் அலெக்சாண்டரிடமிருந்தும் வெளிப்பட்டுக் கொணடிருந்ததான சுகந்த வாசனை பற்றிய குறிப்பை படித்ததும் அப்பன் அப்படி இருக்கலாகாதோ என எண்ணம் வருத்தியதும் உண்டு. பணத் தேவைகளை முன்னிருத்தித்தான் வீட்டுக்கு வரநேர்ந்திருந்தது இப்போது பாமாண்டிக்கு. சாம்பல் பூத்த இருட்டுக் காலையில் சென்று, மீள இருள் கவியும் காலை திரும்பும் நாற்றம்பிடித்த தன் அப்பனைத் தவிர்க்கும் உபாயங்கள் அன்று தோற்றுப் போயின. பாமாண்டி காக்காசியிடம் சிக்கிக் கொண்டான். தன் ஒற்றை வித்து, கல்வியின் உயர் முகடுகளில் நின்று தன் நிமித்தமாய் உலகை பார்த்து கெக்கலியிடும் மகனின் பெருமை என உணர்வுகளின் நெகிழ்வில் ஆதாரமாய் மகனை உச்சி மோந்தான் காக்காசி.

அப்பனின் நடுங்கும் கைகளின் வழியாய் அணைக்கும் வெதுவெதுப்பு பாமாண்டிக்கு அருவருத்தது. தன் மீசை முடிகளை பிஞ்சி விரல்களால் அளைந்து நெஞ்சை உதைத்த மகனின் குழந்தைப் பருவப் புளங்காகிதங்களால் ஆட்கொள்ளப்பட்ட காக்காசி, நரை மண்டிய மீசை குத்தும்படிக்கு பாமாண்டியை முத்தம் செய்யத் தலைப்பட்டான். சாராய நாற்றமுடன் பீடி நாற்றமும் இணைந்த நாற்றக் கலவை காக்காசியிடமிருந்து கிளம்பி பாமாண்டியின் முகத்தை அறைந்தது. விதிர் விதிர்த்தான் பாமாண்டி. குபீரென அப்பனின் உடலிலிருந்து வெளிப்பட்ட பிணவாடை, சதைக்கவிச்சியாய் வெருட்டிக் குலைத்தது அவனை.

வறுத்தக் கறித்துண்டுகளை மெல்லும் அவனை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருக்கும் காக்காசியின் முகக்கனிவையும் வாயில குழைந்து கனலும் பீடியின் தீக் கண்ணையும் சந்திக்கத் திராணியற்று முகம் தாழ்த்திய பாமாண்டியின் சகிப்புத்தனம் ஊசலாடியது. பரவியெழும் நாற்றப்புயலால் தாக்குண்டவனாகி சூலுற்றிருப்பவனைப் போல் வீட்டினுள்ளிருந்த, எழுந்தோடி வாந்தி எடுத்தானவன். வாந்திக்கான எத்தனிப்புக்கள் அடிவயிற்றிலிருந்து எழும்பி எழும்பி நெஞ்சு கிழித்தன. தலையின் பக்கங்களை கைகளால் அழுத்திச் சுருண்ட, அவன் உடம்பு மண்ணில தலைபுதையும் படியாய் இழுத்தது. பாமாண்டியின் வாயிலிருந்து உமிழநீர் சரங்கட்டியது.

பன்றியின் உடம்பில் உறைந்து உலர்ந்த சாக்கடை பொருக்குகளின் நிறமொத்த இருட்டு இருந்த போது காக்காசி வெளியே கிளம்பி விட்டான். கல் கல்லென்று இருமி இருமி இரவெல்லாம் மல்லாந்தபடி, சுவர்கோழிகளின் கீச்சலுக்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தான் அவன். தாவில் தங்காது தாவரித்துக் கிடந்த படுக்கையில் அவன் உடம்பு. கோழைகட்டிய விலாப் படிகளில் மேலேறி கீழிறங்கி ஆட்டம் போட்டது இருமல்.

இருமல் புதைந்து மூச்சுத்திணறிய அவஸ்தைகளின் போதெல்லாம், அருகில் படுத்திருக்கும் செவந்தமணியின் குறட்டைகள் கேலி செய்தன அவனை. எச்சிலும் திட்டுகளுமாய் பிண[illegible]தைச் சபிப்பது போல் அவள் மீது துப்பினான் காக்காசி. அருகிலிருக்கும் வீட்டிலிருந்து எழுந்து அடங்கிய சாமனின் ராக ஆலாபனையையொத்த நீண்ட கொட்டாவி மேலும் சிதைத்தது, காக்காசியை. தன் ஆங்காரத்தை பிரதி எடுத்து வசவுகளாய் சாமனின் வீட்டுத் திசையில் எறிந்தான் அவன்.

அருகிலிருக்கும் சிறு நகரின் மையத்திலிருந்த மசூதியின் தொழுகை அழைப்பு கேட்டபோது, அது அதிகாலை நான்கு மணிக்கானது என உணர்ந்து எழுந்துவிட்ட காக்காசி, படுக்கை விட்டகன்று சந்துக்குப் போனான். ஒன்றுக்கிருந்து, இடிந்த சுவரின் மண்ணால் நரநரவென பல் தீட்டி மொரிக்கிச் சட்டியில் குளிர்ந்திருந்த நீரில் வாய் கொப்பளித்தான். நடையில் கிடந்த நாய் உண்ணியின் பிடுங்கல்களால் பின்னங்கால்கள் உதைத்து ஒலியெழுப்பியது. முடங்கிக் கிடந்த குடிசையின் மேற்கால் கிளைத்திருந்த கோணப்புளி மரத்தில் சிக்கிக் கிழிந்து அலையும் பொலிதீன் பையாக நிலா வெறித்தது. பாத்திரங்கள் உருட்டி கஞ்சியில் கை உளைந்தபோது செவந்தமணி அரற்றினாள்.

"யாருடி நாயீ அது"

"கம்முனு படுமே. நாந்தான்"

"இன்னிக்கி புள்ளெ போயிடறானாங். காலேஜில பீசு கட்டணுமாமே. உம்பாட்டுக்க கமானமா போயிட்டா எப்பிடி?

"ஒரு பத்துமணிக்கா ஷாப்பாண்ட வரச் சொல்லுமே. எஜமாங்கிட்ட கேட்டு வாங்கித் தாரெ்ன் எதானாச்சும்." நடுத்தெருவின் கோழி கூப்பிடும் சப்தம், இருட்டைப் பல வீனமாக்கியது. தெருவில் மண்டிக் கிடககும் இருட்டில் அமிழ்ந்து இருமல் ஒலிகளுடன் கரைந்தான் காக்காசி. முகங்கள் துலங்க ஆரம்பித்த மெல்லிய இருளில் தோல் ஷாப்பை அடைந்த காக்காசி ஆடைகளை களையத் துவங்கினான். சுருண்ட வேட்டியையும் சட்டையையும் உருண்டை பிடித்தது போல் ஒரு மூலையில் பத்திரப்படுத்திவிட்டு, கோணிப்பையின் துண்டு ஒன்றால் கோவணத்தின் மேல் அரைகட்டிக் கொண்டான். தோல் ஷாப்பின் விரிந்த கட்டடமும், தோள்களை ஊறப் போட்டிருந்த தொட்டிகள் வரிசையிடும் பெரும் கொட்டகையும் என எல்லாமே நாற்றத் துண்டுகளால் எழுப்பப்பட்டது போலிருந்தன. பச்சைத் தோல்கள் வேதிப் பொருட்களிலும் சுண்ணாம்பிலும் புளித்து ஊறி நாற்றம் பரப்பின. சவ்வுகளும், தோல் கழிந்த மயிர்களும் இறைத்திருக்கும் பரப்பு எங்கும் கொடூரக்கவிச்சி நாற்றம். தோல்கள் ஊறும் தொட்டிகளில் கரைசல் நீர் புளித்து, குமிழ்கட்டி சீழ் நிறத்தில் இருந்தது.

காக்காசி தோல்களை திருப்பிப் போடவும் இடம் மாற்றவுமாக தொட்டிகளில் இறங்கத் துவங்கினான். கொடூர குளிர்வின் ஊசித் தீண்டல்கள் அவனை வதைத்தன. மறுத்து இற்ற தேகம், எதையும் சட்டை செய்யாமல் தோல்களைத் தூக்கி வீசியது. போர்வை கணக்காய் உப்பி விரிந்திருக்கும் அவை, மூச்சடைக்க மலைப் பாம்பின் சிறுகலாய்த் தழுவி அவன் எலும்புகளை நொறுக்கின. தோற்குவியல்களை இடம் மாற்றி, பச்சையாய் ஊறி நீர்ச் சொட்டும் அவைகளை, அந்தரத்தில் தொங்கும் கொக்கிகளில் பிணைத்து முறுக்கிப் பிழிந்து உலருவதற்கென கொட்டடிகளில் காய விட்டு உழன்றான். வேதிநீர் கரைசல்களில், சவ்வுக் குவியலில், தோல்களின் கவிச்சி நெடியில் நாற்றம் பொதிந்த ஜடமாய் உருமாற்றம் கொண்டிருந்தான் அவன்.

மகன் வருகையின் எதிர்நோக்கும், எஜமானிடமிருந்து பணத்துக்கென எதிர்கொள்ள விருக்கும் பதிலின் அனுமானமும் அவனை மேலும் ஆயாசம் கொள்ளச் செய்து பெருமூச்சைக் கிளப்பின.

இளம்வெயில் பொழுதின்போது அவன் மகனின் வருகை அவனுக்கு அறிவிக்கப்பட்டது. முக்கால் நிர்வாணியாய் தன்னை நோக்கி ஓடிவரும் அப்பனை பார்த்ததும் பெரும் மனத்தாக்குதலுக்கு ஆளானான் பாமாண்டி. கவிச்சி வீச்சம் வாரி அடித்தபடி இருக்கும் சூழலில் நாறும் மனிதனாய் எதிரே நிற்கும் அப்பனைக் காண சகிய வில்லை அவனால்.

"மயிரு நா போயீ துட்டு வாய்கினு வருணுமா? நா போகல. அந்த நாத்தம் புடிச்ச ஷாப்புக் காவெல்லாம்."

"ராஜா. ஒரு வாட்டி மட்டும் போயிட்டு வந்துரப்பா. நா ஒரு வேலையா கெடக்கிறேங்"

நாற்றத்தின் குரூர அருவருப்பில் அதிர்ந்தவனாகவே அவனால் வீட்டில் இப்படி செவந்தமணியிடம் சொல்ல நேர்ந்தது. அந்த வீரியம் அப்பனின் கோலத்தை உள்வாங்கியதும் சரிவதுபோல் இருந்தது- உள்ளுள் இப்போது. வார்த்தைகள் அடைபட்டு, நெஞ்சு வீக்கம் கொண்டது. காக்காசியிடம் பேசவும் எதிர்கொள்ளவும், திராணியற்று மனம் சரிந்தான். நாற்றப் பண்டமாய் மாறிப்போனதை அந்த நொடியில் உணரத் தலைப்பட்டான் பாமாண்டி. முன் தீர்மானங்களின் பட்டை உரிந்து, மெதுவாய் ஒரு பீக்குண்டுக்குள் அமிழ்ந்து வெளியேறினான் அவன். காக்காசியின் நாற்றப் பிரதிகள் அவனிலிருந்து உதிர்ந்து வீழ்ந்தபடியே இருந்தன.



*நன்றி - விசை*

✲

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

நீ முன் செல், சமூகம் உன் பின்னால் வரும்.

- முதுமொழி

# நமது நோக்கு

## அதிகரிக்கும் திருட்டுக்களும் பொதுமக்களின் தற்காப்பும்!

யாழ். குடாநாட்டில் ஒரு சில வாரங்களாகத் தணிந்திருந்த திருட்டுச் சம்பவங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்துவரும் போக்கில் காணப்படுகின்றன.

கடந்த சில தினங்களுக்குள் மட்டும் இரவு வேளைகளில் வீடு புகுந்து திருடிய சம்பவங்களும், பகற் கொள்ளைச் சம்பவங்களும், தனியே செல்லும் பெண்களிடமிருந்து நகைகளைப் பறித்துச்செல்லும் நிகழ்வுகளும், கோயில்களில் நடக்கும் திருட்டுக்களுமாக பல இடம்பெற்றுள்ளன.

ஏற்கனவே - 'நமது நோக்கில்' சுட்டிக்காட்டியிருந்ததைப்போல சரியான பாதுகாப்பை வழங்கவல்ல நிர்வாகமொன்று ஏற்படுத்தப்படாத சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சமூக விரோதிகளின் செயற்பாடுகள் இன்னமும் கட்டுப்படுத்தப்படாத நிலையினையே இத்தொடரும் திருட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சமூகப் பாதுகாப்பும், சட்டம் ஒழுங்கும் - வாகன அனுமதிப்பத்திரங்களைச் சோதனையிடுவதிலும் வீதிப்போக்குவரத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாக சீர்செய்வதுமென மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மாலை நேரத்திற்குப் பின்னர் இச்செயற்பாடுகளும் அரிதாகிவிடுகின்றன. சமூக விரோதச்செயல்களில் ஈடுபடுவோருக்கு இது வாய்ப்பானதாகவும் அமைந்து விடுகின்றது.

இதனால் - இரவுநேரத் திருட்டுச் சம்பவங்கள் ஒரு தொடக்கமாக மட்டுமன்றி வழிப்பறிகளாகவும், கோஷ்டிக் கொள்ளையாகவும் உருவாகும் ஆபத்துக்களும் இல்லாமலில்லை.

இந்த வகையில் பாதுகாப்பற்ற சூழல், சமூக விரோதிகளுக்கு மேலும் மேலும் துணிவையும், ஊக்கத்தையும் தந்துவிடுவதாகவே அமைந்துள்ளது.

பொதுமக்கள் தரப்பிலும் இத்தகைய திருட்டுக்களை, சமூக விரோதச்செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான தற்காப்பு ஒழுங்கமைவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

முன்பிருந்த சமூக உறவும், அதனைப் பேணுவதுமான செயற்பாடுகளில் நாட்டம் குறைந்ததும் - தனித்தனி வீடுகளுக்குள் தொடர்பாடல் முடங்கிப் போனதும் - தனக்குப் பிரச்சினை வரும்போது மட்டும் பார்த்துக்கொள்ளலாம் என்ற முரண் சமூகச் சிந்தனை உருப்பெற்றுவருவதும் - நகரங்களுக்குள் மட்டுமே அருகிப்போயிருந்த குழும உருவாக்கல் கிராமப்புறங்களுக்கும் பரவிப்போனதும் - இத்தற்காப்பு ஒழுங்கமைவை செயற்படுத்தத் தவறிவருகின்றன.

அதேவேளை - கடந்தகால யுத்த அனுபவங்களின்பேரில், பக்கத்து வீட்டில் என்ன நடந்தாலும் வாய்திறந்து கேட்கக்கூட அச்சமுற்ற நாட்களின் நினைவும் - இங்கு தடையாகவே உள்ளது.

ஆனால் - அமைதிக்கான சூழலொன்று உருவாகும்போது - இத்தகைய அச்சங்களையும் தடைகளையும் கடந்ததாக, மக்கள் - விழிப்புணர்வு கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர்.

அடங்கிக் கிடந்து விடுவதும், அச்சமடைவதும் இத்தகைய பாதுகாப்பற்ற நிலையைத் தொடர்ந்து தக்கவைத்திருக்குமே தவிர - சமூக விரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான உறுதியைத் தராது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தவகையில் கிராமங்கள்தோறும், வீதிகள்தோறும் மக்கள் தமக்கான தற்பாதுகாப்புப் பணிகளை உடன் ஆரம்பித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒன்றுதிரளும் மனப்பான்மையும், கூட்டுச்செயற்பாடுகளும் - திருட்டுக்களைத் தடுப்பதோடு மட்டுமல்லாது சமூக உணர்வையும் வளர்ப்பதாகவே அமையும்.

இன்று யாழ். குடாநாட்டில் ஏராளமாகவுள்ள சனசமூக நிறுவனங்கள், கிராமிய அமைப்புக்கள் என்பன இத்தகைய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முயற்சிக்கலாம்.

திருடர்கள் போன்ற சமூகவிரோதிகள் தாமாகத் திருந்தாதபட்சத்தில், மக்களாக அவர்களைத் திருத்தினால்தான் அவர்கள் திருந்துவார்கள் என இருந்தால் அதனைச்செய்வதில் தடையில்லை என்றே கூறலாம்.

# என்னால் பிரதமரை பதவி நீக்கவோ அதிகாரத்தைப் பறிக்கவோ முடியும்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

பிரதமரையோ பாதுகாப்பு அமைச்சரையோ தன்னால் பதவி நீக்கவோ, அதிகாரங்களைப் பறிக்கவோ முடியும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். 'லங்கா தீப' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருக்கிறார்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக எதுவும் செய்யாதபோதும், அமைதிக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டுக்கள் என்மீது சுமத்தப்படுகின்றன. புலிகள் தமது பலத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். ஆயுதங்களைச் சேர்த்துக் கொள்கின்றனர். இந்த விடயத்தில் நான் கவனமாகவே இருக்கின்றேன்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசாங்கம் எந்த உதவியையும் என்னிடம் கோரவில்லை. பேச்சுக்கள் ஆரம்பித்து ஒன்பது மாதங்களின் பின்னரே இது குறித்து நான் பேசத் தொடங்கியுள்ளேன்.



புலிகளுடனான பேச்சுக்களில் சமஷ்டித் தீர்வை வழங்குவதாக அரசாங்கம் இணங்கியுள்ளது. இது பயங்கரமானதொன்றாகும். புலிகளைப் பற்றி மதிப்பிடாமல் அரசு இவ்வாறு இறங்குவது அபாயகரமானது.

நானே நாட்டினதும், அரசினதும் தலைவி. முப்படைகளின் தளபதி. எனக்கே படைகளுக்கு உத்தரவிடும் அதிகாரம் உள்ளது. பிரதமருக்கு அமைச்சரவைப் பொறுப்பைத் தவிர வேறெதுவும் கிடையாது.

அரசாங்கத்தில் ஐந்தில் நான்கு பகுதி அதிகாரங்களும் என்னிடமே உள்ளன. பிரதமர் பெயருக்கே இருக்கின்றார் என ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார்

### விமானக் கொள்வனவு மோசடி

# முன்னாள் விமானப்படை அதிகாரி பொலிஸாரால் விசாரணை

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் இலங்கை விமானப்படை விமானம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக, இலங்கை விமானப்படைத் தலைமை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் அஞ்சலம் பீரிஸை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் விசாரணை செய்துள்ளனர்.

இந்தக் கொள்வனவில் ஏற்பட்ட மோசடிகள் குறித்து நீண்டநேரம் அவரை விசாரித்ததாகக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னைய ஆட்சிக்காலத்தில், முப்படைகளினதும் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக ஆராயுமாறு நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கமைய, குற்றப்புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை விமானப்படையின் முன்னாள் தளபதி எயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கவையும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் இரு தடவைகள் விசாரித்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கடைகள் பொலிஸாரால் பதிவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களைப் பதிவு செய்வதற்கென பொலிஸார் விண்ணப்பப்படிவங்களை விநியோகித்து வருகின்றனர்.

வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் காணப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தில் வர்த்தக நிலையத்தின் பெயர், விலாசம், என்பனவும் மேற்படி வர்த்தக நிலையத்தில் தொழில் புரியும் ஊழியர்களின் பெயர் மற்றும் விலாசம், அடையாள அட்டை இலக்கம் என்பன கோரப்பட்டிருப்பதுடன் ஊழியர்களின் இரு புகைப்படப் பிரதிகளும் கேட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவின் உத்தரவின் பேரிலேயே இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக பதிவு வேலைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(03)

# சர்வதேச ரீதியாக 6500 பாடல்களில் ஈழத்துப்பாடலுக்கு ஐந்தாவது இடம்

பி.பி.சி. நிறுவனம் தனது 70 ஆம் வருட நிறைவையொட்டி நேயர்கள் மத்தியில் உலகளாவியரீதியில் நடத்திய பாடல் கருத்துக்கணிப்பில், ஈழத்துப் பாடலொன்று ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பி.பி.சி. நிறுவனம் நடத்திய இந்தக் கருத்துக் கணிப்பில் உலகம் முழுவதிலும் உள்ள 153 நாடுகளில் இருந்து, 6,500 பாடல்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் அதிகமான நேயர்களின் விருப்பினைப் பெற்ற சிறந்த 10 பாடல்கள் தெரிவு செய்யப்பட்டன.

இதில் 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வலிகாம இடம்பெயர்வை நினைவு கூரும், "பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது போகுமிடம் தெரியாமல்" என்ற பாடல் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது. இப்பாடலை திருமலைச்சந்திரன் பாடியுள்ளார்.

முதலாவது இடத்தில் ஜரிஸ் பாடலும், இரண்டாவது இடத்தில், இந்திய தேசிய கீதமான "வந்தே மாதரமும்", மூன்றாவது இடத்தில் பாகிஸ்தானியப் பாடலான, "தில் தில்" பாகிஸ்தானி"யும், நான்காவது இடத்தில் தளபதி படத்தில் இளையராஜாவின் இசையில் உருவான "அடி ராக்கம்மா கையைத் தட்டு" என்ற பாடலும் உள்ளன.

பி.பி.சி. நடத்திய இந்தக் கருத்துக் கணிப்பில் லட்சக் கணக்கான நேயர்கள் பங்குபற்றினர் என்பதும், பல்வேறு மொழிப் பாடல்களுக்கும் வாக்குகளை அளிக்குமாறு கோரி இணையத்தளங்கள் பலவற்றில் விளம்பரம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# திலக் மாரப்பனவை சந்தித்த பின்னரே திட்ட வரைபை பொன்சேகா தயாரிப்பு!

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்த திட்ட வரைபினைத் தயாரிக்க முன்னர், யாழ். குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இந்தியாவுக்குப் புறப்பட்டுச் செல்ல முன்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்புக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் சென்றிருந்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ். குடாநாட்டுப் பாதுகாப்பு நிலவரங்கள் பற்றி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை - இந்தியா சென்ற அமைச்சர் திலக் மாரப்பன, அங்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸை சந்தித்து பேசுவதற்கு அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



சரத் பொன்சேகா

# கந்தரோடையில் புத்தர் சிலை; வழிபாடுகளும் ஆரம்பம்!

(மானிப்பாய்)

கந்தரோடை தொல்லியல் நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கொட்டகையில் புத்தர் சிலையொன்று வைத்து வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமான வழிபாடுகள் தொடர்பான வைபவத்தில் இராணுவ உயர் அதிகாரிகள், பிக்குமார்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மாதகலுக்கு வருகை தந்த சங்கமித்தை இரண்டாவது நாள் கந்தரோடைக்கு வந்ததாகவும், அந்த ஞாபக தினத்தையொட்டியே இச்சிலை வைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இங்கு வருகைதரும் மக்கள் இவ்விடத்தைப் புனிதமாகப் பேணவேண்டும் என்றும் அங்கு வருகைதந்த தமிழ் மக்களுக்கு நூல் மற்றும் தீர்த்தம் என்பனவும் வழங்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(42)

# புலிகளின் கப்பல் நடமாட்டம் அறிவதற்கு இந்திய உதவி!

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, அடுத்த வாரம் இந்தியாவுக்குச் சென்று, அங்குள்ள மூத்த கடற்படையதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக கடற்படைத் தலைமையக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொள்ளும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரஸ் தயா சந்தகிரி, இந்தியக் கடற்படை அதிகாரிகளுடன் முக்கிய விடயங்கள் குறித்து ஆராயவுள்ளார்.

குறிப்பாக, புலிகளின் கப்பல்களின் நடமாட்டம் குறித்து தகவல்களை அறிந்து கொள்வது தொடர்பாகவும் இந்தியக் கடற்படையின் உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் பேச்சுக்கள் நடத்தப்படும் எனவும் தெரியவருகின்றது.

# பாரம்பரிய இசையின் தரத்தை எடை போடுவதில் சினிமா இசை மயக்கத்தை தோற்றுவித்துள்ளது!

*சுமார் 40 வருடங்களாக நாதஸ்வர இசைப்பணியில் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட நாதஸ்வர மேதைகள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி ஆகியோரை தமிழ் இசையுலகம் என்றும் மறக்காது. இந்திய நாதஸ்வர மரபுகளுக்கிணங்க, அவற்றைக் கற்று யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும், தமிழர்கள் வாழும் பல நாடுகளிலும் இவர்கள் இசைக் கச்சேரிகளை நடத்தியுள்ளனர். இச்சகோதரர்களில் மூத்தவரான வி.கே. கானமூர்த்தியை விருந்தினர் பக்கத்தில் சந்திக்கின்றோம்.*

*கேள்வி:-*தங்கள் இசைப்பரம்பரைத் தொன்மை பற்றிக் கூற முடியுமா?

*பதில்:-*எங்கள் குடும்பமே ஒரு இசைக்குடும்பமாகும். எங்கள் மூதாதையர்கள் இசையுலகில் இன்புறத் தோன்றி அகிலம் போற்றப் புகழ்பரப்பியவர்கள். எனது பேரனார் மூளாய் ஏ.வி.ஆறுமுகம்பிள்ளை அவர்கள் தவில் வித்துவானாக மட்டுமல்லாமல், சங்கீதத்தையும் நன்கு கற்றவர். எனது தந்தையார் கோதண்டபாணி ஒரு நாதஸ்வர மேதை. எனது மாமன்மார்களான "வலங்கைமான்" சண்முகசுந்தரம், "அகில இலங்கை வானொலி புகழ்" சந்தான கிருஷ்ணன், "இன்குழல் வேந்தன்" பாலகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன் போன்றோர் இசையுலகிற்குத் தம்மை அர்ப்பணித்தவர்கள். பிரபல வயிலின் வித்துவான் இராதாகிருஷ்ணன் அவர்கள் எனது பெரிய தந்தையாரின் மகன் ஆவார். இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

*கேள்வி:-* உங்களது நாதஸ்வர இசையுலகப் பிரவேசம் எப்படி அமைந்தது?

*பதில்:-* நான் பத்து வயதிலேயே நாதஸ்வரம் கற்கத் தொடங்கிவிட்டேன். எனது தாயே முதல் ஊக்கியாகச் செயற்பட்டார். முதலில் எனது தாயாரின் தந்தையான மூளாய் ஆறுமுகம்பிள்ளை அவர்களிடம்தான் ஆரம்பச் சிட்சை பெற்றேன். 10-15 வயதுவரை எனது மாமனார் கோண்டாவிலைச் சேர்ந்த வை.நாராயணசாமி அவர்களைக் குருவாகக் கொண்டு கற்று முடித்தேன். மேலும் சகல விடயங்களையும, பயில்வதற்காக 15-17 வயதுவரை மாவிட்டபுரம் எஸ்.கே இராசா அவர்களிடம் சிட்சை பெற்று, அவரின் மருமகன் எம்.எஸ்.சண்முகநாதன் அவர்களுடன் இரண்டு ஆண்டுகள் நாதஸ்வரம் வாசித்தேன்.

*கேள்வி:-*உங்களது முதல் அரங்கேற்றம் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* 1963 ஆம் ஆண்டு எனது 19 ஆவது வயதில் நானும் எனது தம்பி பஞ்சமூர்த்தியும் தாவடி உப்புமடபபிள்ளையார் கோயிலில் சேர்ந்து வாசித்தோம். எங்களது வாசிப்புக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. அன்று தொடக்கம் இன்றுவரையும் எங்களது நாதஸ்வரப் பணி தொடர்ந்து செல்கின்றது.




*கேள்வி:-*சுமார் 40 வருடங்களாக இசையுலகில் வலம் வருகிறீர்கள். தங்களின் மனநிறைவு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:-*இக்காலப்பகுதியில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல கச்சேரிகளில் பங்குபற்றியுள்ளேன். இககச்சேரிகளில் உள்ளூர், வெளியூர் பிரபல நாதஸ்வர மேதைகளோடு ஒரே மேடையில் வாசித்துள்ளேன். இந்நிகழ்ச்சிகள் யாவும் எனக்கு மன நிறைவு தரும் விடயங்கள் ஆகும்.

*கேள்வி:-* அவ்வாறாயின் அவர்களின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா?

*பதில்:-*ஆம்,உள்ளூர் மேதைகள் என்.கே.பத்மநாதன், சாவகச்சேரி பஞ்சாபிகேசம், காலஞ்சென்ற மூளாய் வி.ஏ.பாலகிருஷ்ணன், இணுவில் கே.ஆர். சுந்தரமூர்த்தி, அளவெட்டி எஸ்.சிதம்பரநாதன், எம்.பி.பாலகிருஷ்ணன் போன்றோரையும், வெளியூர் மேதைகளாக ஆண்டான் கோயில் செல்வரத்தினம், கோட்டூர் இராஜரத்தினம் பிள்ளை, தேரணந்தூர் சீனிவாசகம் பிள்ளை, அம்பல் இராமச்சந்திரன், திருநெல்வேலி ஜில்லா சண்முகக்குட்டி போன்றோரை குறிப்பிடலாம்.

*கேள்வி:* தங்களது புத்திரர்கள், குடும்ப உறுப்பினர்கள் தொடர்பாக இசையுலகப் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?

*பதில்:-* எனக்கு 3 புத்திரர்களும், 2 புத்திரிகளும் உள்ளனர். மூத்தவர் கண்ணதாசன். தவில் பழகியவர். எங்களுடைய வெள்ளிவிழாவில் தவில் வாசித்தவர். இரண்டாவது மகன் சந்திரசேகரம். அவர் படித்துக் கொண்டிருக்கும்போதே உள்நாட்டு யுத்தம் காரணமாக வெளிநாடு சென்றுவிட்டார். மூன்றாவது மகன் கிருஷ்ணதாசன். என்னுடன் சேர்ந்து நாதஸ்வரம் வாசிப்பவர். எனது 2 மகள்மாரின் துணைவர்களுள் மூத்தவர் ராம்குமார். விஞ்ஞான மாணிப் பட்டதாரியான இவர், கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். பாரம்பரிய இசையான தவிலைக் கற்றுக் கொணடவர். ஓய்வு நேரங்களில் எங்களுடன் சேர்ந்து வாசிப்பவர். இளைய மருமகன் பாலமுருகன். நாதஸ்வரம் வாசிக்கும்போது எனக்கு பக்க பலமாகத் திகழ்பவர். இருவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் உண்டு என நம்புகின்றேன்.

*கேள்வி:-* இசையுலகில் தங்கள் பங்களிப்பு, தங்கள் பொருளாதாரத்தில் உயர்ச்சிகளை ஏற்படுத்தியதா?

*பதில்:-*ஆம், இது நல்ல கேள்வி. ஆரம்பத்தில் மிக கஷ்டமானநிலையிலேதான் வாழ்ந்தோம். 63 ஆம் ஆண்டுக்குப் பின் ஓரளவு முன்னேறி இன்று சகல வசதிகளுமுடைய ஒருவராக விளங்குவதோடு, புகழோடும் உள்ளோம். இசையுலகப் பங்களிப்புத்தான் எம் வாழ்வை உயர்த்தியது.

*கேள்வி:-*தங்களுக்கு ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம் பற்றி...?

*பதில்:-* 1989 ஆம் ஆண்டு கம்பன கழகம், யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் எனக்கும், எனது தம்பி பஞ்சமூர்த்தி அவர்களுக்கும் வெள்ளிவிழாக் கொண்டாடியது. அதில் பல்வேறு அறிஞர்களின் பாராட்டுதல்களும், புகழ்ச்சிகளும் கிடைத்தன. இவ்விழாவானது எமது நாதஸ்வர இசையுலக வாழ்வை மேலும் முன்னெடுப்பதில் வழி சமைத்தது. இப்படியான ஒரு விழாவை என்றுமே என்னால் மறக்கமுடியாது. வெளியூர்ப் பயணங்களை மேற்கொண்டுள்ளேன். குறிப்பாக- இந்தியா, சுவிஸ், சிங்கப்பூர், மலேசிய்யா போன்ற நாடுகளில் கச்சேரிகளை நடத்தினேன். இந்தியாவின் பல பாகங்களிலும் மக்கள் பாராட்டும் பல கச்சேரிகளை நடத்தினேன். குறிப்பாக, மலேசியாவில் நடந்த கச்சேரியின் பாராட்டுதல்களில், பிரபல பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களின் பாராட்டுக்களும் நெஞ்சை விட்டு அகலாதவையாகும்.

*கேள்வி:-*இறுதியாக எமது உள்ளூர் இரசிகர்கள் பற்றி தங்கள் கருத்து யாது?

*பதில்:-*நாதஸ்வர இரசிகர்களைப் பொறுத்தளவில் இருவகையான ரசிகர் கூட்டம் இருக்கின்றனர். கர்நாடக இசையை ரசிக்கின்றவர்கள் ஒருகூட்டம். சினிமாப் பாடல்களை


வீ.கே.கானமூர்த்தி

ரசிக்கின்றவர்கள் மற்றைய கூட்டம். 3 மணித்தியால கச்சேரிகளில் 2 மணித்தியாலத்துக்கு மேல் கர்நாடக இசையை வாசிப்பேன். கர்நாடக இசையை ரசிக்கின்றவர்கள் முன் அமர்ந்திருந்து ரசித்துக்கொண்டிருப்பார்கள். பின்பு சினிமாப் பாடல்களை வாசிக்கத் தொடங்கியதும் வீதிகளில் கூடித்திரிந்த ரசிகர் கூட்டம் கச்சேரியின் முன் அமர்ந்து தங்களை மறந்து தாங்களும் வாசிக்கின்றவர்போல் காட்சியளித்துக் கொண்டிருப்பார்கள். சில பேர் பாடல்களை வாசிக்கும்படி துண்டு அனுப்புவார்கள். சினிமா ரசிகர்களுக்கு அன்றைய கச்சேரிகளில் வாசிக்கப்பட்ட பாடல்கள் திருப்தியளிக்காவிட்டால் கச்சேரி நல்லதல்ல என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள். சினிமா இசைப்பாடல்களின் தாக்கம் எமது பாரம்பரிய இசையின் தரத்தை எடை போடுவதில் மயக்கநிலையை தோற்றுவிக்கிறது.

**நேர்காணல்:-**
**எஸ்.சாந்தகுமார்**

# காச நோய் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்படுமா?

எயிட்ஸ் நோயின் தாக்கம், அவற்றுக்கான தடுப்பு முறை அவசியம் பற்றிக் கடந்த சில வாரங்களாக அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், யுனிசெவ் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன், யாழ்.பல்கலைக்கழகச் சமுதாய மருத்துவத் துறை மாணவர்கள் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். இது வரவேற்கத்தக்க விடயம்.

சிறு சிறு குழுக்களாக யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், 'விழிப்புணர்வு பெறுவோம்' என்ற தலைப்பில் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை- அரசஅலுவலகங்கள், பாடசாலை மட்டங்களில் நடத்தி வருகின்ற அதேவேளை, சனசமூக நிலையங்கள் ஊடாகக் கிராம மட்டங்களுக்கும் தமது விழிப்புணர்வை விஸ்தரிக்க உள்ளன.

இந்த எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மக்கள் மத்தியில் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் எமது மக்களின் கலாசாரக் கட்டமைப்பு உறுதித் தன்மையாகப் பேணப்பட்டு வருகின்றபோதும் எயிட்ஸ் நோயின் அபாயத்தில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

இந்தநிலையில் மறுபுறம் யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக காசநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக யாழ். போதனா வைத்திய சாலை வட்டாரங்கள் கூறுகின்றன. இக்காசநோயாளிகளுக்கு வலிகாமம் வடக்கில் மயிலிட்டி காச நோய் வைத்திய்சாலை அரும் பங்காற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது இவ்வைத்தியசாலை உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இருப்பதால் இயங்க முடியாத நிலையில் உள்ளது.

யாழ்குடாநாட்டில் எயிட்ஸ் நோயின் தாக்கம் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாது இருப்பது போல், காசநோயின் தாக்கம் எப்படி? அதன் தடுப்பு முறை என்ன? என்கின்ற விழிப்புணர்வு எம்மக்கள் மத்தியில் புரியாத விடயமாக இருக்கின்றது.

அந்தவகையில், இந்நோய் வயது

**செய்திக்கட்டுரை**

போனவர்களுக்கான அதாவது பழசுகளுக்கான நோய்.அவர்களுக்குத்தான் காச நோய் வரும் என்ற தப்பான கருத்து இளம் மட்டங்கள் மத்தியில் நிலவி வருகின்றது.



இக்காசநோய் எவ்வயதினரையும பீடிக்கும் எனவும், இதற்கு வயது வேறுபாடு கிடையாது என்ற உண்மைகள்- யாழ்.போதனா வைத்தியசாலைச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் ஆரம்பநிலைக் காசநோயாளர்கள் மற்றும் கோப்பாயில் இயங்கும் காச நோயாளர் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுக் செல்லும் நோயாளிகளின் பதிவுகளைப் பார்த்தால் புரியும். இந் நோய் இளம் வயதினரைப் பாதிப்பது அண்மையில் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கோப்பாய் பகுதியிலும் ஓர் காசநோய் வைத்தியசாலை இயங்குவதும் அதன் செயற்பாடு பற்றிப் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அண்மையில் இக்காசநோய் வைத்தியசாலையை வேறு ஓர் இடத்திற்கு மாற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் மறியற் போராட்டம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டோர் பின்வரும் கோரிக்கையினை முன் வைத்தனர். காசநோயாளர் சிகிச்சை நிலையத்தை, மக்கள் நடமாட்டமில்லாத பகுதிக்கு மாற்ற வேண்டும் எனவும்,

இச்சிகிச்சை நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களைத் தனியாருக்குச் சொந்தமான இடங்களில்/காணிகளில் வீசுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும்,

இங்குள்ள காசநோயாளர்கள் இப்பகுதியில் அமைந்துள்ள சிகையலங்கரிப்பு நிலையம் மற்றும் உணவகங்களுக்குச் செல்வதால் சுகாதாரக்கேடு ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இங்கு எதற்கெடுத்தாலும் போராட்டமும், பகிஷ்கரிப்பும், உண்ணாவிரதமும் என்ற நிலையில், இக்காசநோயாளர்களைப் புறக்கணிக்காது, இதனைப் பெரிதுபடுத்தாது இவ்வைத்தியப் பிரிவை உரிய அதிகாரிகளுடன் உரிய முறையில் எடுத்துரைத்து, சந்திக்குக் கொண்டுவராது ஆரோக்கியமான நடவடிக்கை எ்டுக்கவேண்டும்.

குடாநாட்டில் தற்போது காசநோயின் தாக்கம் அதிகரித்து வருவதாலும் அந்நோயைப் பற்றிய தவறான கருத்தும் அந்நோயாளரை வெறுத்து ஒதுக்குதல்/புறந்தள்ளுதல் போன்ற நிலையினை அகற்றவும், எயிட்ஸ் நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்போல், சமுதாய மருத்துவத்துறை மாணவர்கள் மக்கள் மத்தியில் காசநோய் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த முன்வரவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**சி.என்.ஹெய்ன்ஸ்**

## சின்னஞ் சிறு செய்திகள்

### கல்வியங்காட்டில் சங்கிலி அபகரிப்பு

(கல்வியங்காடு)

கல்வியங்காடு 3ஆம் கட்டை என்னும் இடத்தில் கடந்த சனிக்கிழமை தன்னுடைய வீட்டிலிருந்து அயல்வீட்டுக்கு சென்று கொண்டிருந்த சிவலிங்கம் பரமேஸ்வரி என்னும் வயோதிபப் பெண்ணின் இரண்டு பவுண் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களாலேயே இத்திருட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. (90)

### சமாச நிர்வாகத் தெரிவுக் கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் புதிய நிர்வாகத் தெரிவு எதிர்வரும் 31ஆம் திகதி காலை 10 மணிக்கு நகரசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து சனசமூக நிலையங்களிலிருந்தும் இரு உறுப்பினர்கள் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நகரசபை உத்தியோகத்தர் திருமதி.யோ.பரமேஸ்வரி அறிவித்துள்ளார். (ச)

### சாயி சமித்தியில் நத்தார் விழா

யாழ்ப்பாணம் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி 3 மணிக்கு நத்தார் விழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அருட்தந்தை எஸ்.ஜே.இராஜநாயகத்தின் விசேட ஆன்மீகச் சொற்பொழிவும், கலை நிகழ்ச்சியும் நடைபெறும்.

### உள்வரும் அழைப்புக் கட்டணம் இல்லை

சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம், கையடக்கத் தொலைபேசிகளுக்கான உள்வரும் அழைப்புக்களுக்கான கட்டணம் அறவிடுவதைக் கைவிடுவதற்கு இணககம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தொலைத் தொடர்பு சீராக்கல் ஆணைக்குழுவிடம் அனுமதி பெறப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தங்க ஆபரணம் கண்டெடுப்பு

பெறுமதிமிக்க தங்க ஆபரணம் ஒன்று சிற்றூர்தி நடத்துனரால் யாழ். தரிப்பிடத்தில் கண்டெடுக்கப்பட்டு சிற்றூர்தி சங்கத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அடையாளங்காட்டி சிற்றூர்தி சங்கத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### ஹாட்லிக்கு 'ஜிம்னாஸ்ரிக்' உபகரணங்கள்

(வடமராட்சி கிழக்கு)

ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர்சங்க கொழும்புக்கிளை, 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 'ஜிம்னாஸ்ரிக்' விளையாட்டு உபகரணங்களை ஹாட்லிக் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (17)

# பாடசாலையிலிருந்து திரும்பிய சிறுமி இஸ்ரேலியப் படைகளால் படுகொலை

(காஸா)

பதினாறு வயதுப் பலஸ்தீனச் சிறுமி ஒருவர் இஸ்ரேலிய இராணுவத்தினரால், சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மேற்படி சம்பவம் காஸாப் பள்ளத்தாக்குப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தினர் காஸாப் பகுதியில் உள்ள யூதக் குடியேற்றங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் வீதித்தடைகளை மிக த்தீவிரமாக அமுல்படுத்தி வருகின்றனர்.

கொல்லப்பட்ட சிறுமி வீதித் தடையை தாண்டிச்சென்றதினாலேயே தாம் சுட்டதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

யூதக்குடியேற்றங்களில் தாக்குதல்களை பலஸ்தீனப் போராளிகள் சிறுவர்கள் மூலம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும்- ஆயுதங்கள், வெடிபொருட்களை யூதக் குடியேற்றப்பகுதிகளுக்கு கடத்துவதற்கு அவர்கள் முயற்சிக்கலாம் என்றும் இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை- கொல்லப்பட்ட சிறுமியின் பெற்றோர், பாடசாலையில் இருந்து வீடு நோக்கி நடந்து வரும்போதே சிறுமி சுடப்பட்டதாக தெரிவித்தனர்.


தொடர்கதையாகும் பலஸ்தீனர் துயரம்

மேற்படி சிறுமி கொல்லப்பட்ட பகுதியில் கடந்த வாரம் பலஸ் தீனப் போராளி ஒருவரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக இஸ்ரேலிய இராணுவப்பேச்சாளர் கருத்து வெளியிடுகையில், பலஸ்தீனத் தீவிரவாதிகள் திடீரென கண்மூடித்தனமாகச் சுட்டதனால் அதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய இராணுவத்தினர் சுட்டபோதே சிறுமி தற்செயலாகக் கொல்லப்பட்டதாகவும், இச்சம்பவத்தில் இஸ்ரேலிய இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

யூதக் குடியேற்றங்களைப் பாதுகாப்பதற்காக தொடர்ந்தும் தீவிரமாக வீதித்தடைகளை அமைக்கப் போவதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இதேவேளை- காஸாப்பகுதி மற்றும் மேற்குக்கரையோரங்களில் நடைபெறும் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் தொடர்பாக- அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன மௌனம் சாதித்து வருவது கவலையளிப்பதாக பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

உலகவலம்

# காஷ்மீரில் நள்ளிரவுக் கொடூரம் இராணுவம் சுட்டு 3 சிறுவர் பலி!



இந்தியாவின் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில், மூன்று சிறுவர்கள் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டனர்.

நான்கு வயது முதல் பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட மூன்று சிறுவர்களும் தமது குடும்பத்தினருடன் உறங்கிக் கொண்டிருக்கையில் இக் கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

காஷ்மீரின் குளிர் காலத் தலைநகரமான ஜம்முவில் இருந்து வடமேற்குப் பிரதேசமான பாம்கோட் பகுதியில் சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

காஷ் மீரிலுள்ள சில அவதானிகள் இத் தாக்குதல்களை இந்தியப் படையினரே மேற்கொண்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்துள்ளனர். முஸ்லிம் குடும்பங்கள் மீது இவ்வாறான தாக்குதல்களை இரவு வேளைகளில் இந்தியப் படையினர் மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறாக நடந்த கடைசித் தாக்குதலில் பதினொரு முஸ்லிம்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இழப்பின் வேதனை தாங்காது கதறியழும் உறவுகள்.

# ஐவரிகோஸ்ட் யுத்தம் தொடர்கிறது பிரெஞ்சு இராணுவமும் களத்தில்



ஐவரிக்கோஸ்டில் போராளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தில், முதற்தடவையாகப் பிரெஞ்சுத் துருப்புக்கள் போரில் பங்கேற்றுள்ளன.

போராளிகள் தம் நிலைகள் மீது சுட்டதாக பிரெஞ்சு இராணுவத்தினர் கூறியுள்ளனர். இதனால் போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தாம் இறங்க வேண்டிய கட்டாய நிலையில் இருப்பதாகப் பிரெஞ்சு இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- பிரான்சியப் படையினருடன் மோதுவது தமது நோக்கமாக இருக்கவில்லை என்றும், அரசாங்கப்படையினருடன் நடந்த மோதலின்போது தவறுதலாக நடைபெற்ற சம்பவமே இது எனப் போராளிகள தெரிவித்துள்ளனர்.

இதேவேளை- பிரெஞ்சு இராணுவத்தினர் தம் மீது ஐவரிக்கோஸ்ட் போராளிகள் கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்கியபோதும், தாம் பதில் தாக்குதலை பெரியளவில் நடத்தவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.


யுத்தத்தில் பங்காளியாகுமா பிரெஞ்சுப் படைகள்..?

# செய்திப் படங்கள்


குவைத்தில் - ஈராக்கிய எல்லைக்கு சில கிலோமீற்றர்களே தொலைவில், அமெரிக்கப்படையினர் இராணுவ முகாமொன்றைத் தாக்கும் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.


இந்தியாவில் - பெங்களூர் எக்ஸ்பிரஸ் ரெயில் தண்டவாளத்திலிருந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியிருக்கும் காட்சி இது. ஒன்பது ரெயில் பெட்டிகள் தமது பாதையிலிருந்து தவறியதால் 18 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.


காஸா பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் வீதித் தடைகளையும் சோதனை மையங்களையும் ஏற்படுத்தியிருப்பதால் - ஆற்றோரங்கள், மாற்றுப்பாதைகள் வழியே பலஸ்தீனர்கள் தமது பயணங்களை மேற்கொள்கின்றனர்.


போரில் தனது வலது காலை இழந்த ஆப்கானிஸ்தானின் யுத்தத்தளபதி முஜாஹிட் ரோஸி ஹல் உட்பட அங்கவீனமடைந்த ஆப்கான் படையினர்- இங்கிலாந்து உட்பட பதினைந்து நாடுகளுக்கு விஜயம் செய்து அமைதி பறறியும், ஆப்கானிஸ்தானிலுள்ள அங்கவீனமடைந்தோர் பற்றியும் எடுத்துக்கூறவிருக்கின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
பிரதான வீதி,
சித்தன்கேணி.
Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு
உங்கள் பிள்ளைகளை சேருங்கள்
(சி-304)

# புலிகளுக்கு நவீன தொடர்பு சாதனம் வேறு வழிகளில் கிடைத்திருக்கலாம்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ

(கொழும்பு)

நோர்வேத் தூதரகம் மூலமாக விடுதலைப்புலிகளுக்கு எடுத்துவரப் பட்ட வானொலி உபகரணத் தொகுதியில், அதிசக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனமான 'விசற்' கருவியும் இருந்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இக்கருவிமூலம் விடுதலைப் புலிகள் வெளிநாடுகளுக்குத் தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 25 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்தத் தொலைத்தொடர்புச் சாதனத்தைப் புலிகள் பெற்றிருப்பதானது, இந்தியாவின் வானொலி ஒலிபரப்புக்களில் பாதிப்பினை ஏற்படுத்தலாம் என இந்தியத்தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைசசின் செயலாளர்-

நோர்வேத் தூதுரகம் மூலம் புலிகளுக்கு வழங்கப்பட்ட வானொலி உபகரணத்தொகுதியில் 'விசற்' என்ற தொடர்பு சாதனம் இருக்கவில்லை எனபதைத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

புலிகளுக்கு அனுப்பப்பட்ட உபகரணத்தொகுதியில் 'விசற்' கருவி இடம்பெறவில்லை. புலிகளிடம் இத்தகையதொரு கருவி தற்போது இருக்குமானால்,



அதனை அவர்கள் வேறு ஏதோ வழிகளின் மூலமே பெற்றிருக்க வேணடும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

# சமாதான நீதவானாக இந்துகுருமார்; ஆலயங்களுக்கு 1000 கணினிகள்!

## அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பணிபுரியும் அனைத்து இந்துமத குருமாருக்கும் சமாதான நீதவான் பட்டங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்துசமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூர் நாவலர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இந்து ஆலயங்களுக்குக் காசோலைகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் பணிபுரியும் அனைத்து இந்துகுருமாருக்கும் சமாதான நீதவான் பட்டம் வழங்கப் படவுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் இந்து சமய விவகார அமைச்சினூடாக வழங்கப்படும் வேலை வாய்ப்புக்களும், இந்து குருமாரின் சிபார்சின்படியே வழங்கப்படும்.

இதன் மூலம்- சமூகத்தில் இந்து குருமாரை மேலும் உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்லமுடியும். அடுத்தவருட முற்பகுதியில் இந்தியாவிலிருந்து ஆயிரம் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டு அவை இந்து ஆலயங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இந்து ஆலயத்தைச சூழவுள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு கணினிப் பயிற்சியை வழங்குவதுடன் ஆலயத்திற்கும் இளைஞர், யுவதிகளுக்கும் இடையில் ஓர் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்தார்.

## இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்

# அமெரிக்காவிடம் இருந்து அழைப்பு ஏதும் வரவில்லை

இலங்கையுடன் பாதுகாப்பு ரீதியான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்வது குறித்து, அமெரிக்காவிடம் இருந்து இதுவரை அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது தாக்குதல் தொடுக்கும்போது, இலங்கையைத் தளமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்கா செய்து கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ, இவ்வாறான ஒரு சந்தாப்பம் இதுவரை ஏற்படவில்லை. ஏற்படும் போது பார்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்திரேலியாவுடனான ஆட்டம் இலங்கை அணி மண் கௌவியது

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நேற்று நடைபெற்ற இலங்கை- அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 143 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான லேமன் 119 ஓட்டங்களைக் குவித்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்த்திலிருந்தே அவுஸ்திரேலிய அணி வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல தடுமாறியது. 43 வது ஓவரில் இலங்கை அணி 163 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் முக்கோணக்கிரிக்கெட் தொடரில் இலங்கைஅணி இரண்டு முறை இங்கிலாந்து அணியிடமும், ஒரு போட்டியில் அவுஸ்திரேலியாவிடமும் தோல்வி கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தலைமறைவிலிருந்து திரும்பிய ரட்ணசிறி சாட்சியமளிப்பதற்கு தயாரென அறிவிப்பு

(கொழும்பு)

இறப்பர் ஏற்றுமதிக் கூட்டுத் தாபனத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து விசாரணைகளில் ஈடுபட்டுள்ள குற்றப்புலனாய்வுத்துறைப் பொலிஸாருக்கு முன்பாக ஆஜராகி சாட்சியமளிக்கத் தயார் என்று, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாகத் தலைமறைவாக இருந்து வந்த முன்னாள் பிரதமரின் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்காக பொலிஸார் பல்வேறு முயற்சிகளையும் எடுத்திருந்தனர். இந்த விசாரணைகளுக்கு உதவுமாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடமும் பொலிசார் உதவிகோரியிருந்தனர்.

இந்த நிலையில் இதுவரை தலைமறைவாகியிருந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, தான் பொலிஸார் முன்னிலையில் சாட்சியம் அளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். தனது சாட்சியத்தை இரண்டொரு நாட்களில் வழங்கவுள்ளதாகவும் அவா கூறியுள்ளார்.

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## உயர்தரப் புள்ளிகளின் அடிப்படையில்

# ஆயிரம் தகுதிகாண் ஆசிரியர்கள் வட - கிழக்கில் நியமிக்கப்படுவர்!

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் முகமாகத் தகுதிகாண் அடிப்படையில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு, அரசாங்கம்- மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர் தரப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்நியமனம் வழங்கப்படவுள்ளது.

கல்விச்சேவை அமைச்சினால் இது தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

### கீரிமலை...

பொலிஸார் முழு நேரக் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர். அதே வேளை- ஆயுதங்கள் தொடர்பாக எந்த நேரத்திலும் இப்பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடவோ, தேடுதல்களை மேறகொள்ளவோ படையினருக்கு அதிகாரம் உள்ளது என்பன போன்ற நிபந்தனைகள் இந்தத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

### யாழ். படை...

அனுப்பி வைக்குமாறும் அமைசசர் மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

இதேவேளை - இவ்விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கொண்ட கூட்டமொன்றை ஜனவரி முதல் வாரத்தினுள் கொழும்பில் கூட்டி, துன்பங்களை அனுபவிக்கும் மக்களது நாளாந்த வாழ்வை சுமுகமாக்குமுகமாக, படையதிகாரிகளுக்கான வழிநடத்தலை பிரதமர் வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் மகேஸ்வரன் தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

# ஐ.தே.க., பொ.ஐ.மு. சேர்ந்து சமாதானத்தை ஏற்படுத்தலாம்

## அமைச்சர் மகிந்த விஜேசேகர கூறுகின்றார்

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டி அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் அணிதிரள வேண்டுமென்று அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதனைச் செய்யாவிட்டால் அரசாங்கம் நாடாளுமன்றில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேறுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவது சிரமமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தெவிநுவரவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய அமைச்சர்,

ஜனாதிபதியால் சாதிக்க முடியாத காரியமான யுத்தத்தை நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைகளை பிரதம மந்திரி ஆரம்பித்திருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

A/L - 2005
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி - 4
காலை - 08.00 மணி
D.M.I
யாழ்.நகர்

# ஏ-9 வீதியில் கனரக வாகனங்கள்; தற்காலிகமாக நிறுத்தக் கோரிக்கை!

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

யாழ்-கண்டி வீதியில் கனரக வாகனங்கள் செலுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னியில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக யாழ். கண்டி வீதி பாரியளவு சேதமடைந்துள்ளது. பாலங்களில் கியூம் குழாய்கள் பதிக்கப்படவில்லை. தெருவினுடைய தளமும் உறுதியாக இல்லை. வடிகால்களும் சீராக இல்லை.

இவை காரணமாக தெருவின் இருபக்கத்திலும் பெருமளவு நீர் தேங்கி நிற்கின்றது. பாரிய வாகனங்கள் இப்பாதை ஊடாகத் தொடாந்தும் பயணம் செய்யுமாயின் பாதை மிகவும் மோசமாகப் பாதிப்புக்குள்ளாகும்.

பத்துத் தொன்களுக்கு மேல் பொருட்கள் கொண்டுவரும் கொள்கலன்கள் உட்பட, பாரிய எரிபொருள் தாங்கி வாகனங்கள போக்குவரத்துச் செய்வதை உடனடியாக இடைநிறுத்தும் செய்யுமாறு கிளிநொச்சி அரச அதிபர் கேட்டுள்ளாா.

# தென்னாபிரிக்க அமைச்சாகள் மூவா் இலங்கை வருகின்றனா்!

(கொழும்பு)

தென்னாபிரிக்காவில் இருந்து மூன்று அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் இங்குள்ள பல மட்டத்தினருடனும் கலந்துரையாடவுள்ளனர். இனமுரண்பாடு தொடர்பான விடயங்களையும் ஆராயவுள்ளனர்.

தென்னாபிரிக்க அமைச்சர்களது இவ்விஜயமானது பெரிதும் பயனளிக்கும் வகையில் அமையும் என எதிர்பார்க்கப்படுவதாக, அந்நாட்டின் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.